www.tamilarangam.net

Raya

⑦

1991
OKTOBER

# அஆஇ

AANAA AAWANNAA IENAA



RAYA
67 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

அரசியல் ஆய்வு இலக்கிய காலாண்டு இதழ்

Tijdschrift voor Tamils in Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எம் கருத்து

அண்மைக்காலமாக ஐரோப்பியநாநாடுகளில் வெளிநாட்டவர்கள் மீது பல்வேறு விதமான தாக்குதல்கள் நடத்தப்படுகிறது. அகதிகளாக தங்கியிருக்கும் பலர் இவ்வகையான தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

ஹிட்லர்' இன்கொள்கைகளே ஐரோப்பாவிற்குப்பொருத்தமானது என்றும், வெளிநாட்டவர்கள்அகற்றப்படவேண்டிவர்கள் என்றும்வளர்ச்சியடைகின்ற நாசிகளின் தாக்குதல்கள் ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், கிழக்குஐரோப்பியநாடுகள், பலவற்றிலும்தொடர்ந்துகொண்டிருக்கிறது.

அகதிகள் முகாம்கள், வெளிநாட்டவர் குடியிருப்புப்பகுதிகள், வீடுகள்மீதும் தாக்குதல்களைச்செய்வது, பெற்ரோல் குண்டுகள்வீசுவது, கத்திகள் தடிகள், பொல்லுகளால் தாக்குவது போன்றசம்பவங்கள் நடந்துள்ளன.

கடந்த வருடம் ஜேர்மனி இணைந்ததற்கான ஒருவருடபூர்த்தியடைந்ததைக் கொண்டாடுமுகமாகநாசிகள் வெளிநாட்டவருக்கான தாக்குதல்களைத்தீவிரப்படுத்தியுள்ளார்கள். இத்தாக்குதல்கள் மிகமோசமானதாக இருந்ததுடன், வீடுகள்தீக்கிரையானதுடன் பாலகர்கள் சிலர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

பொலிசாருக்கு தாம் உதவுவதாகவே (வெளிநாட்டவர்களை வெளியேற்றுவது) இந்நாசிகளும் வலதுசாரித்தீவிரவாதிகளும் கூறிக்கொள்வது ஒருபுறமிருக்க, பொலிசாரும் பலவிடங்களிலும் பாராமுகம் காட்டுவதாகவே செய்திகள் கிடைக்கின்றது.

பல்வேறுநாடுகளிலும் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளினால் அரசில் அகதிளாதி மக்கள் மீண்டும்இஇனவாதத்தால் துரத்தியடிக்கப்படுகிறு ர். ஐரோப்பியநாடுகளும், அரசுகளும் அகதிகள் வருகையைத்தடைசெம்வதற்கான சட்டமாற்றங்களை கொண்டுவர கங்கணம் கட்டி நிற்கும் ஒருபுறமும், நாசிகளினதும், வலதுசாரித்தீவிரவாதிகளினதும் தாக்குதல்கள் மறுபுறமாகவும் நடந்துகொண்டிருக்கிறது. ஐரோப்பாவின் ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ல பகுதிகளிலும் நாசிகளின் செல்வாக்குகள் அதிகரித்துக்கொண்டுவருவது வெளிநாட்டவருக்கான எதிர்காலம் எப்படி அமையப் போகிறது? என்ற கேள்வியைத் தொடுக்கிறது. ஜேர்மனியின் ஒரு நகரான Bremen இல் இறுதியாக நடந்த தேர்தல் முடிவுளின்படி 8% வாக்குக்கள் நாசிகளுக்குக்கிடைத்துள்ளது. பல்வேறுபகுதிகளிலும் இதுமேலும் அதிகரித்துக்கொண்டே போகிறது.

ஐரோப்பிய நாடுகளின் தொடர்புசாதனங்களும், பல அரசியல்வாதிகளும் இனவாதத்தைப்பேசியே அரசியல் பிழைப்பு நடத்துவதற்கானகாலங்களை படிப்படியா கொண்டுவருகிறார்கள். அண்மையில்பிரான்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி' கிஸ்காட்' "பெரும்படையாக உள்வரும்வெளிநாட்டவரை தடுப்பதற்கு கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்" என்கிறார். இக்கருத்தைப் பாசிசக்கட்சியைச்சேர்ந்த லாபென்' என்பவர்வரவேற்றுள்ளார். அண்மையில்நெதர்லாந்தில் VVD கட்சியைச்சேர்ந்தபோக்கன்ஸ்ரெயின்' இங்கு வாழும் இஸ்லாமிய மக்களுக்கெதிரான துவேசத்தை தனது பேச்சுக்கள், கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

கிழக்கு ஐரோப்பாவின் நாடுகளிலும் பல்வேறு இனவாத தாக்குதல்கள் நடத்தப்படுகிறது தம்மீ' கம்யூசஆட்சி' வந்ததால்த்தான் கிட்லரின் ஆட்சி இல்லாமல் போய்விட்டதாயும், கிட்லர் ஆண்டிருந்தால் நாமெல்லாம் மேற்கு ஐரோப்பா போல்' வளர்ந்து' இருப்போம் என்ற ஒரு தப்பான எண்ணமும், போலிகளான கம்யூனிச தலமைகளின் தவறுகள் என்பதைக் கவனிக்காமல் விட்டுவிட்டு கறுப்பினத்தவர், வெளிநாட்டுக்காரர்கள் மீது கோபமாக பிரதிபலிப்பதுடன் நாசிகளாக மாறித்தாக்குகிறார்கள். இது பொருளாதாரப் பிரச்சனைகளையும் ஏனைய பிரச்சனைகளையும் வர்க்க அடிப்படையில் அணுகாதபோதுதான் இன, மத பாகுபாட்டின் திசைவழிகளுக்கு இட்டுச் செல்கின்றது என்பதனையே உணர்த்துகின்றன.

இத்தாக்குதல்களின் நடுவே இலங்கையர்களும் அங்கேயும் இனவாதமும், அதிதீவிரப்பயங்கரவாதமும் ஜனநாயகமறுப்பும் தலைவிரித்தியடிக்க, வந்தவிடங்களிலும் இனவாதமும் பாசிசமும் துரத்தியடிக்கிறது. அடிக்க அடிக்க நாம் எங்கு வரை ஓடப்போகிறோம் நாம் நிதானமாய் இனிமேலாவது என்ன செய்யலாம் என்பதைச்சிந்திக்க வேண்டாமா?

வெளிநாட்டவர்கள் மீதான தீவிர தாக்குதல்கள் நடக்கும் அதே நேரத்தில் பல்வேறு நகரங்களிலும் (பேர்லின், கம்பேர்க்) மக்கள் அதற்கெதிரான ஊர்வலங்களையும் நடத்தியுள்ளார்கள். தொடர்புசாதனங்களதும், அரசியல்வாதிகளினதும் இனவாத அரசியலுக்கு எதிர்புக்களை ஒவ்வொரு நாடுகளிலும்காட்டி வருகிறார்கள். இம்மக்க நட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ள் இணைந்து இவலாதத்திற்கும் பாசிசத்திற்கும் எதிரான பணிக ளில் நாம் இடுபடுவது எமக்கும் எமது எதிர்கால சந்ததிக்கும் உதவியாகவிருக்கும்.

-ஆசிரியர்குழு-

---

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்கிற" நல் நாகரீகவிழுமியங்கள் கொண்ட ஒரு சமுகம் கொலை வெறியர்களின் ரௌத்திர சன்னதத்திற்கு உட்பட நேர்ந்த கொடுமைக்கு ராஜனியின் மறைவு ரத்தநிருபணமாகி விட்டது.

# உன் இரத்த நிருபணம்

# நாளைய ஒளிக்கீற்றாய்



ராஜினின் சாவு மகோன்னத மானது. தமிழர்தம் சமுதாய வரலாற்றிலும், சிந்தனை வரலாற்றிலும் ராஜனியின் மறைவு ஒரு முக்கிய மையப்புள்ளியாக அமைகிறது.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்கிற" நல்ல நாகரீக விழுமியங்கள் கொண்ட ஒருசமுகம் கொலை வெறியர்களின் ரௌத்திர சன்னத

www.tamilarangam.net

த்திற்கு உட்பட நேர்ந்தகொடுமைக்கு ராஜனியிறைவு ரத்த நிருபணமாகிவிட்டது.

மந்திக்குத் போன தமிழ் சமுகத்தின் மீது அவள் வைத்த நேர்மையான விமர்சனங்கள் அவரது உயிரையே விலை கேட்டிருந்தது. எழுத்திற்காக சுட்டுக் கொலை செய்யப்பட்ட முதற் பெண் விமர்சகியாக ராஜனி தமிழர்வரலாற்றில் தனியிடம் பெறுகிறார்.

அவள் இணைந்து எழுதிய முறிந்த பனைமரம் The broken palmyrah நூலின் முக்கியத்துவம் அது ஒரு யுத்த சாசனம் என்பது மட்டுமல்ல, ஈழத்தமிழரின் அரசியல் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது என்று ஆதங்கம் கொண்டஒரு மனிதாபிமானியின் விசாரணைக்குறிப்பாகவும் மனித உரிமைகளுக்கான முரசமாகவும் அமைந்தது என்பதில் தான் தங்கியுள்ளது.

1934ல் ஐரோப்பாவி லெங்கும் நரவேட்டையாடிய ஒருவனின் குரல் மட்டுமே தான் தனிப் பெரும் குரலாக—வெற்றிக்கோஷமாக உலகெங்கும் ஒலித்தது. சகலதொடர்புச்சாதனங்களும் அவன் பிம்பத்தையே எதிரொலித்தன. ஆனால் அந்த நாஜி வெறியனின் கொடுர அச்சுறுத்தலுக்கும், எந்த நேரமும் கண்டுபிடிக்கப்பட்டு கொல்லப்பட்டு விடலாம் என்ற பீதிக்குள்ளும் அன்ன பிராங்க்க Anna Franke என்ற பதினாறு வயதும் நிறையா ஒரு இளம் பெண் (1929 –1945) தான் ஒளிந்திருந்த அறைக்குள்ளிருந்து சத்தமில்லாமல் எழுதி வைத்த டயறிக்குறிப்புக்கள் சத்தியத்தை சாத்தியமாக்கியிருக்கின்றன. இன்று அந்தக் கொலைவெறியனின் பெயரைக் பிரஸ்தாபிப்பதே அருவருப்பானதாகிவிட்டது. ஆனால் அன்ன பிராங்கின் குரல் இன்றும் இனிவரும் தலைமுறைகளிலும் கம்பீரமாய் கேட்கும்.

சகல சந்தர்ப்பவாதங்களிலும் பொய்மைகளிலும், நயவஞ்சகங்களிலும் திளைத்து அதனையே அரசியல் அறமாக வரித்துக்கொண்டுவிட்ட ஒரு சூழலில் ஒளிக்கீற்றாய், வசந்தகால உஷையாய், அநியாயங்களுக்கு எதிரான பெரும் குரலாய் ராஜனி உன்னை நாங்கள் என்றும் நினைவுகூர்வோம்.

—குமாரலிங்கம்—

வாசித்துவிட்டீர்களா?

தூண்டில்

மாத சஞ்சிகை, வருட சந்தா 40 DM,
[illegible] Sudasien Buro,
Grossehelm str 58, 4600 Dortmund,
WEST GERMANY

பனிமலர்

வெளியீடு
[illegible]
BCM POLARIS
LONDON WCIN 3XX.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலண்டனில் தரமான தமிழ் நாடக முயற்சிகள்

—சிவசேகரம்—



இலங்கையிற் தமிழ்நாடகத்துறையின் அண்மைக்கால விருத்திக்குப் பெரும் பங்கு அளித்தோரில் பாலேந்திராவும் தாஸீஸியஸும் முக்கியமானவர்கள். பாலேந்திரா எண்பதுகளின் இடைப்பகுதியிலும் தாஸீஸியஸ் எழுபதுகளின் பிற்பகுதியிலும் இலங்கையை விட்டு நீங்கிக் கடந்த சில வருடங்களாக லண்டனில் வாழ்கின்றனர். ஒரு அந்நியச்சூழலில் இலங்கையிற் கட்டியெழுப்பிய கலையுணர்வுடைய ரசிகர் பரம்பரை ஒன்றை முற்றாகவே இழந்து அதற்கு ஈடுசெய்ய அதையொத்த ஒரு ரசனையுள்ள பார்வையாளர்கள் போதாத சூழ்நிலையில் மனந்தளர்வது மிக எளிது.

இந்த மண்ணில் நெடுங்காலமாக வாழ்ந்துவரும் தமிழர் மத்தியிற் கலையார்வமுடையோரில் முக்கியமான ஒரு பகுதியினர் மேனாட்டுக் கலைவடிவங்களிலும் ஆங்கில வாயிலான கலை இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபாடுடையவராவர். இன்னொரு சாராரின் கலை உணர்வு பரதநாட்டியம் கர்நாடக இசை என்ற துறைகளில் அவர்களது கவனத்தைத் திருப்பியது. பொருள் வசதியும் எட்டிக்குப் போட்டியாக இயங்கும் மனப்பாங்கும் பிள்ளைகட்கு இசையும் நடனமும் பயிற்றி அரங்கேற்றங்களை நடத்தி அத்துடன் பிள்ளைகளது தமிழ்க் கலை ஆர்வத்துக்கு முடுவிழா நடத்தும் போக்கிலேயே பலரைச் செலுத்துகின்றன.

இந்தியாவிலிருந்து வருகை தரும் பிரபல இசைக்கலைஞர்களும் நடனக்கலைஞர்களும் நடத்தும் நிகழ்ச்சிகள் ஓரளவு வெற்றிகரமாக நடக்கின்றன. இவற்றும் விசேடமாக, சினிமா நடிகர்களும் சினிமாவுக்கு இசையமைப்போரும் பாடுவோரும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் பெரும் வரவேற்பைப் பெறுகின்றன தமிழரின் தமிழ்க் கலாச்சார விருத்தியால் இன்றைய தமிழ்த்திரைப்படம் என்ற பாமரத்தனத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தினின்று விடுபடமுடியாமல் உள்ளது. தமிழ்ப் படப்பாட்டு ஒலிக்கசெற்றுக்களும், தமிழ்ப் படங்களினது வீடியோக் கஸெற்றுக்களும் பொம்மை, திரைச்சித்திரா போன்ற சஞ்சிகைகளும் 70களின் பின் இங்கு வந்து குடியேறிய பலரைப் பிடித்துள்ள நோய்கள்.

இவற்றினின்று விடுபட்டுத் தமிழ்-இலக்கியத்துக்கும் கலைகட்கும் ஒரு புதிய வளர்ச்சியும் சமுதாயப் பரிமாணமும் தேவை என்பதை உணரமுடியாதவாறு இங்குள்ள வாழ்க்கைமுறை அமைந்துள்ளது. திருமணவைபவங்கள், பிறந்ததினங்கள், கோவில் விசேடதினங்கள், குறிப்பிட்ட சில பாடசாலைகளின் பழைய மாணவர் ஒன்று-கூடல்கள், மீண்டும் தலை தூக்கியுள்ள தமிழ் சினிமாக்காட்சிகள் போன்றவற்றிலேயே சந்திப்புக்கள் பொதுவாக நிகழ்கின்றன.

இந்த மண்ணின் கலாச்சாரத்தின். செழுமையை உள்வாங்க இயலாதவாறு மறிக்கும் சமூக உறவுகட்கும் அரசியற் பிரச்சனைகட்கும் மத்தியிற் தமிழர் தமக்கென ஒரு இருப்பையும், தம் கலாச்சாரத் தனித்துவத்தையும் நிலை நாட்ட எடுக்கும் முயற்சிகள் என்ன? ஒப்புக்குத் தம் குழந்தைகட்குத் தமிழ் கற்பிப்பதுடனும் பரதமும் கர்நாடக இசையும் பயிற்றுவிப்பதுடனும் தமிழ்க் கலாச்சாரத்தின் இழிநிலையைக் குறிக்கும்-சினிமா-வீடியோ போதையில் மூழ்குவிப்பதுடனும் தமிழர் நின்று விடும் போது உயர்ந்த கலை உணர்வுடைய ஒருவர் ஒன்றில் ஒதுங்கி நிற்கலாம் அல்லது எதிர்நீச்சல் போடலாம். லண்டனிற் தரமான தமிழ் நாடகங்களைத் தயாரித்து வழங்கும் முயற்சி ஒரு கடுமையான எதிர்நீச்சல்தான்.

பாலேந்திரா, ஆனந்தராணியின் தளராத ஆதரவுடன் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின்-பணிகளை முதலில் இலங்கையிற் தயாரித்த நாடகங்களை இங்கு மேடையேற்றும் முயற்சிகளூடாகத் தொடர்ந்தார். இந்திரா பார்த்தசாரதி எழுதிய-'மழை', 'பசி', பேர்ரோல்ட் ப்ரெஃட்டின் ஜேர்மன்-மொழி நாடகத்தைத் தமிழாக்கிய 'யுகதர்மம்', பதல்சர்க்காரின் 'முகமில்லாத மனிதர்கள்', இயனெஸ்குவின் தமிழாக்கமான 'இடைவெளி', தமிழ்நிந்த முலிய அன்ரன்செக்கோவின் 'சம்பந்தம்', ஆகியன ஒன்று முதல் ஏழு வரையிலான மேடையேற்றங்களைக் கண்டன. யுகதர்மம் தவிர்ந்த மற்றையவை தயாரிப்பதற்கும் மேடையேற்றுவதற்கும், அதிக வசதிகளையோ ஆட்பலத்தையோ வேண்டாதவையாக இருந்ததற்குக் காரணம் லண்டனில் உள்ள இளந் தமிழரின் திறமைக் குறைவல்ல. கஷ்டப்பட்டு உழைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஒத்திகைகட்கு ஒதுக்கக்கூடிய நேரம் போதாமையுமே பல திறமைசாலிகளை நாடக மேடையினின்று விலக்கிவிட்டது.

www.tamilarangam.net

பொருளாதாரப்பிரச்சினைகள் ஒத்திகைக்கான வசதிகள் போதாமை போன்ற பல நெருக்கடிகளையும் மீறி மீண்டும் தரமான நாடகங்களைத் தயாரிக்கும் உறுதியுடன் பாலேந்திரா செயற்பட்டாலும், இலங்கையில் அவரது நாடகங்கள் பற்றி அறிந்த கலையுணர்வுடைய ரசிகர்கள் சிலரே இங்கிருந்தமையால், இலங்கையிற் போல் இங்கு நாடக மண்டபங்கள் நிரம்பி வழியவில்லை. இங்கு புதிய ரசிகர் வட்டத்தைக் கட்டியெழுப்பும் தேவையும் இருந்தது.

இங்குள்ள இளைஞர்களது பங்கு பற்றலை ஊக்குவிக்கும் முறையில் தயாரிக்கப்பட்ட கூத்துப்பட்டறை முயற்சியான 'பார்வையாளர்களை' அடுத்து 1986 ல் தயாரிக்கப்பட்ட 'கவிதா நிகழ்வு' இலங்கையின் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றைக் கவிதைகள் மூலம் கூறும் 'எரிகின்ற எங்கள் தேசம்' எனும் வெற்றிகரமான இசை நாடகத்துக்கு வழியமைத்தது. 'பார்வையாளர்கள்' 1986 இல் பாரதிய வித்தியாபவன் நடத்திய நாடகப்போட்டியில் நான்கு பரிசுகள் பெற்றது. 'எரிகின்ற எங்கள் தேசம்' அதற்கடுத்த வருடம் மூன்று பரிசுகள் பெற்றது. இதைவிட, நகுலன் என்பவர் எழுதி தீபத்தில் பிரசுரமான 'பலி' ஒரு சிறு நாடகமாகத் தயாரிக்கப்பட்டது.

லண்டன் வாழ் தமிழர்களும் நாடக ரசனை மேலும் வளரவேண்டிய நிலையில் அவர்கட்கு எளிதாக விளங்கக்கூடிய நாடகங்களும் அவர்களையும் ஈடுபடுத்தக்கூடிய நாடக முயற்சிகளும் அவசியம் என்பதை பாலேந்திரா அனுபவரீதியாக உணர்ந்தார். இதன் விளைவாக, 'வேடரை உச்சிய வெள்ளைப்புறாக்கள்' என்ற மௌனகுருவின் நாடகப்பிரதியை ஆதாரமாகக் கொண்டு பிரென்ற் தமிழ்ப் பாடசாலைப் பிள்ளைகள் நடித்த நாடகம் மேடையேற்றப்பட்டது. இது சிறுவர்களுக்குப் பேச்சுத் தமிழில் மட்டுமன்றி மேடைப்பயிற்சியிலும் உற்சாகமூட்டிய ஒரு நல்லதயாரிப்பாதலாற் பல பெற்றோரது ஆதரவையும் கண்டது.

லண்டனில் பி.பி. சி. 'மகாபாரதம்' தொடரை ஆங்கிலத்தலைப்புக்களுடன் வாராவாரம் ஒளிபரப்பும் சூழலில், ரஞ்சித்ராய் சௌத்திரி எழுதி ஞானி மொழிபெயர்த்த 'பாரததர்மம்' என்ற கருத்தாழம் மிக்க நாடகம் மேடையேற்றப்பட்டது. பாண்டவர் அரக்குமாளிகையின் தீயினின்று தப்புவதற்காக ஒரு சண்டாளகுலப் பெண்ணும் அவரது பிள்ளைகள் ஐவரும் தீக்கிரையானது எவ்விதம் இவ்வளவு காலமும் தவறென்று காணப்படவில்லை என்ற அறஞ்சார்ந்த கேள்வியை இந்த நாடகம் எழுப்புகிறது. இதுவும் பார்வையாளர்களது பெரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ம் பாராட்டைப் பெற்றது. இதனையடுத்து இன்றைய செக்கோஸ்லவாக்கிய ஜனாதிபதி வஸ்லாவ் உறவெல் தன் வாழ்க்கை அனுபவத்தை அடிப்படையாகக் - கொண்டு எழுதிய இரண்டு ஓரங்க நாடகங்கள் 'மன்னிக்கவும்' எனும் பொதுத்தலைப்பில் மே-டையேறின. தமிழிற் தழுவப்பட்ட போதும், செகோவின் 'சம்பந்தம் போன்று ஒரு சர்வதேசியத்தன்மையை இந்த நாடகங்கள் பெற்றிருந்தன. அரசின் அடக்குமுறையின் கீழ் தன் சுதந்திர உணர்வு காரணமாக பாதிப்புக்களின் இரண்டு அம்சங்களைக் காட்டிப் பரிதாபத்துக்குரியோர் தம் கொள்கைக்காகக் கஷ்டப் படுவோர் அல்ல, மாறாகத்தம் பிழைப்புக்காக எதையுஞ்செய்ய முனைவோரே என்று இந்த நாடகங்கள் உணர்த்துகின்றன. இவையும் சிறப்பான மேடையேற்றத்தால் மிகுந்த வரவேற்பைப்பெற்றன.

தாஸீஸியஸின் நாடகங்கள் களரி எனும் அமைப்பினூடு மேடையேறின. மகாகவியின் 'புதியதொரு வீடு' முதலில் 1968 ல் அவர் இலங்கையிற் தயாரித்தளித்தது. இதைவிட, குழந்தை சண்முகலிங்கத்தின் 'கூடிவிளையாடு பாப்பா', நா. சுந்தரலிங்கத்தின் 'அபசுரம்' என்பனவும் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டன. தாஸீஸியஸ் லண்டன் வந்தபின் தயாரித்த நாடகங்கள் அரசியற்பாங்கானவை எனலாம். மிகுந்த சிரமத்துடனும் எண்ணிக்கையில் அதிகமான நடிகர்களுடனும் மிக வெற்றிகரமாக- மேடையேற்றப்பட்ட நாடகம் இளைய பத்மநாதனின் 'மீண்டும் ராமாயணம்' மீண்டும் பாரதம்' எனும் இனஒதுக்கலும் போ-ராட்டமும் பற்றிய நாடகமாகும். 'எங்கே போகிறோம்' என்ற நாடகம் மனிதத்துவத்தை வலியுறுத்தும் ஒரு அரசியல் நாடகமாகும். இது Sri Salami என்ற கிண்டலான பெயருடன் - சுவிற்செலாந்தில் தமிழ், ஜேர்மன், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் மேடையிற் பேசப்படுமாறு தயாரிக்கப்பட்டது. இதிற் பல- சுவிஸ் நாட்டுக் கலைஞர்கள் பங்கு பற்றினர். 'களத்தில்' என்ற பெயரில் அண்மையிற் தயாரிக்கப்பட்ட நாடகம் வழமையான நாடகங்கள் போலன்றி ஒரு- நவீன நாடகப்போக்குக்குரியது. இலங்கையின் இன்றையபோர்ச்சூழலில் மக்கள் படும் இன்னல்களின் சித்தரிப்பாக இது அமைந்துள்ளது. செய்திகளிலும்- உலக நடப்புக்களிலும் பொதிந்துள்ள அரசியல், நாடக சாராம்ஸத்தை மேடை நிகழ்ச்சியாக வழங்கும் இம்முயற்சி தமிழுக்குப் புதியது.

தாஸீஸியஸ்- சுவிஸ் அரசாங்க கலாச்சார துறையின்கீழான 'மரலெம்' (MARALEM) எனும் அமைப்பில் நாடகத்துறைப் பயிற்றுவிப்பாளராகவும், நெறியாளராகவும் பகுதி நேரப்பணியாற்றுகிறார். அவரது மேடைத்திற- மையை லண்டன் தமிழர்கள் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்ந்து தமக்கேயாக்கிக் - கொள்வார்களாயின் அது மகிழ்ச்சிக்குரியது.

எவ்வாறாயினும், தரமான தமிழ் நாடகங்களுக்கு லண்டனில் - ஆதரவு படிப்படியாக முன்னேறி வருகிறது: லண்டன் தமிழ் - நாடகங்கள் பற்றிப் பிரான்ஸ் ஜேர்மனி, கனடா போன்ற - நாடுகளில் வாழும் தமிழர்கள் அறிவதற்குக் காட்டும் ஆர்வம் உற்சாகமூட்டுமொன்றாகும்.

இவையெல்லாவற்றையும் விட, லண்டனில் ஜுன் 1991 இல் அலைக்காற்றுக்கலைக்கழகம் நடத்திய நாடக விழாவில்- பாலேந்திராவும், தாஸீஸியஸும் தயாரித்த ஐந்துநாடகங்கள் - ஒரே மேடையில் ஒரே மாலைப்பொழுதில் நடந்தமை மிகுந்த மனநிறைவைத் தந்தது. இவ்வாறான ஒத்துழைப்பும் பரஸ்பர- மதிப்பும் புரிந்துணர்வும் மேலும் தொடருமாயின், லண்டன் வாழ்- தமிழர் பெருமைப்படக்கூடிய ஒரு விடயமாக லண்டன் தமிழ் - நாடகங்கள் உலகமெலாம் இனிய தமிழ் மணம் பரப்புவது விரைவிலேயே கைகூடும்.

---

கிறிஸ் ஃபான் வைக் கவிதைகள் இரண்டு
தமிழில்: மணி

## காரணம்

கொலைகாரர்களும் கள்வர்களும்
எளிதாகவே
சிலைகளாகி
நினைவுச்சின்னங்களாகிறது
ஏனென்றால்
அவர்களது கண்கள்
ஏற்கனவே கருங்கற்கள்
அவர்களது இதயங்கள்
கற்பாறைகள்.

தென்னாபிரிக்காவில் றிவர்லீ(யோகான்ஸ்பேக்) எனுமிடத்தில் 1956இல்பிறந்த கிறிஸ்ரோஃபர் ஃபான்வைக்(Christopher van Wyk) எழுதியமுதலாவது கவிதைத்தொகுதி 1979இல் பிரசுரமானது. அதில்ஸொவே஁ரோ(SOWETO) ஆதரவுக் கவிதைகள் இடம்பெற்றன.

www.tamilarangam.net

# வோட்டும் வேட்டும்

வோட்டு
அதென்னவெனில் வாக்களித்தல்.
இதா பார் பெரியதொரு பெட்டி.
நீளமாக அதில் ஒரு துவாரம்.
ஓம், உண்டியல் போன்று.

உனக்கு தெரிவுகள் உண்டு.
கொடூரமான அரசாங்கம் வேண்டுமா?
அல்லது நல்ல அரசாங்கமா?

சோம்பேறி அரசாங்கமா?
அல்லது செயற்படும் ஒன்றா?
மக்களை யார் பராமரிப்பது என்று
முடிவுசெய்யச்
சதுரமான காகிதத் துண்டில்
நீ ஒரு × போட வேண்டும்.
அதற்கு முன்னர் நீ

உன்னை அடையாளம் காட்ட வேண்டும்.
அது சுலபம்.
அடையாள அட்டை மட்டுமே தேவை.
அது பாங் புத்தகம் போல இருக்கும்.

வித்தியாசம் ஏதென்றால்
அதை வீட்டில் விட்டு வந்தாயெனில்
அகப்பட மாட்டாய்
அது வேட்டு.
இனி வேட்டு.
ஆ, இப்போது, உனக்குக் கட்டாயமாக
வேட்டு என்னவென்று தெரிந்திருக்கும்.

www.tamilarangam.net

# இலங்கை:
# சிங்கள தமிழ் இனமோதல்

- பி. சரவணமுத்து -

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 1990ஜூன் மாதம் ஆரம்பித்த யுத்தமானது இலங்கையின் ஒரு தேசம்—அரசைஅமைக்கும் (NATION-AND-STATE BUILDING ) துயரக்கதையில் ஒன்றும் செய்து கொள்ளமுடியாத இடத்திற்கு வந்து நிற்பதையே வெளிப்படுத்துகிறது. பிரிவினைவாத, புரட்சிகர கிளர்ச்சிகள்ஒரு புறம், அத்தோடு இந்தியா போன்றபிராந்திய பெரும் வல்லரசு ஒன்றின் ஆதிக்க ஊடுருவல் இன்னொரு பக்கம் சிறுபான்மைத் தமிழர்களுக்கும், சிங்கள அரசாங்கத்திற்கும் இடையில் 1983லிருந்து ஆரம்பமாகிவிட்ட யுத்தத்துடன் ஒவ்வொரு சமுகத்திற்குள்ளும் உள்வாரிக்கிளர்சிகளும் இடம்பெற ஆரம்பித்துவிட்டன. ஆட்சி அதிகாரத்தை வசப்படத்திக்கொள்ள ஜே.வி.பியினர் இரண்டு முறை (1971, 1987-9) ஆயுதக்கிளர்சியை மேற்கொண்டிருந்தனர். தீவிரப்போக்குகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், சாத்தியமாகாத கோரிக்கைகளுக்கும் ஏற்றுக்கொள்ளமுடியாத தீர்வுகளுக்கும் இடையில் ஒரு சுமுகமான தீர்வுக்கான தளத்தை அமைப்பதற்கும் இலங்கை—இந்திய ஒப்பந்தம் உருவானதோடு, இந்தியசமாதானப்படையும் இலங்கையில் வந்திறங்கியது. என்ன செய்தும் இலங்கை மக்களிடையே தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கிக்கொள்வது சாத்தியமில்லாது பேரயிற்று. இலங்கையின் பாதுகாப்பற்ற—ஸ்திரமற்ற நிலமைக்கான பின்னணியைப்பற்றியும் இலங்கையில் தேசிய நல்லிணக்கத்திற்கான சாத்தியக்கூறுகள். பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## இனரீதியான கெடுபிடிகள்

## பாராளுமன்ற காலகட்டம்

சுதந்திர இலங்கையில் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையான அந்தஸ்து பற்றிய கெடுபிடிகள் இலங்கையருக்கு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட 1931ம் ஆண்டிலிருந்தே ஆரம்பத்துவிட்டன. கல்வி வளர்சியினாலும் மற்றும்பிரிட்டிஸ் காலனியக் கொள்கை காரணமாகவும் அதுகாலவரை அரசநிர்வாகத்தில் தாங்கள் அநுபவித்து வந்த செல்வாக்கு இனிமேல் பெரும்பான்மை சிங்களவரின் ஆட்சியில் என்றென்றைக்குமாக மோசமாகக் குறைக்கப்பட்டுவிடும். என்ற தமிழர்களின் அச்சம் அதிலிந்து வேருன்றிவிட்டது.

மறுப்புறத்தில் சிங்களவர்கள் தங்களது பெரும்பான்மைப் பலத்திற்கேற்றவகையில் தங்களது நிலையையும் அந்தஸ்தையும், உயர்த்திக் கொள்ளவும் தென்னி

www.tamilarangam.net

ந்தியாவுடன் இணைந்த தமிழர்களின் கலாச்சாரத்திற்கு மாறாக இலங்கையில் தமது தனித்துவமான கலாச்சார, சமய அம்சங்களையும் பேணி உரிமை கோரி நின்றனர்.

1948.ல் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பேயே ஒரு பீடிகை போல-பாராளுமன்ற தொகுதிகள் இனவாரியாகவே ஒதுக்கப்படவேண்டும் என்று தமிழர்கள் முன்வைத்த கோரிக்கைகளில் அவர்களது அரசியல் ஆதங்கங்கள் வெளிப்படலாயின. இந்தக்கோரிக்கைகள் நிறைவேற்றிவைக்கப்படவில்லையாயினும், சிங்கள-தமிழ் மக்கள் இலங்கையில் பரவி வாழும் தன்மையினால் பிரிட்டிஷ் வெஸ்ட்மின்ஸ்டர் பாணி தேர்தல் தொகுதி அமைப்பானது பெரும்பான்மை சிங்களக்கட்சிகள் தெற்கிலும்சிறுபான்மைத் தமிழர்கள் வடக்கிலும் ஆதிக்கம் பெற்றுஇனரீதியில் இரு வேறு அரசியல் துருவப்போக்குகள் உருவாவதையே உறுதிப்படுத்தியது. மேலும்அரசாங்கத்தில் சிங்களவரே பெரும்பான்மை வகிப்பர் என்பது திட்டவட்டமாகத்தெரிந்ததும் மத்திய அரசில் தமிழர்கள் மேலும் புறக்கணிக்கப்படுவார்கள் என்ற அச்சமும் தொடர்ந்து நிலவலாயிற்று.

இருந்த போதிலும் சுதந்திரத்திற்குப்பின் தமிழ்த்தலைவர்கள் பாராளுமன்ற அரசியலில் ஈடுபாடு காட்டத்தொடங்கினர். சிறுபான்மையினரின் நலன்களைப்பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்பற்றி அரசாங்கத்துடன் உறவு கொள்ளவும் ஆதரவு பெறவும் இந்த யுக்திமுறை உதவியது. பாராளுமன்ற ஜனநாயகம் பற்றி சிங்கள-தமிழ் இனங்களின் உயர் குழாத்தினரிடையே உடன்பாடு

காணுவதிலும் இலங்கையின் சுதந்திர இயக்கத்தில் அரசியல் அமைப்பு வகித்த தனித்த முக்கியத்துவம் மேலும் பலம் பெறுவதையும் இது உறுதிப்படுத்தியது. கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அரசாங்கத்தின் கொள்கையாக-நடைமுறையில் முழுமையான அரசியல் சலுகைகள் எதுவும் தமிழர்களுக்குக்கிடைக்கவில்லை. எனினும் சிற்சில பின்னேற்றங்களுக்கூடாகவும் இந்த உயர்குழுவினருக்கிடையிலான இணக்கம் 1970களின் இறுதியில் சிதைந்துபோகும்வரை நின்று நிலவியது.

அரசியல்ரீதியாக அனுசரித்துப்போகவும் சமூக இனப்பிரச்சினைகளை பாராளுமன்ற ஜனநாயக அமைப்பின் வரம்பிற்குள் கையாளவும் முனைந்த போக்கிற்கு இப்போது அழிவு நேர ஆரம்பித்தது. சிங்கள, தமிழ் இனங்களின் உயர் குழுவினர் என்று சொல்லப்பட்டவர்கள் தமதுதேர்தல் போட்டா போட்டிகளில் வெற்றி பெறும் நோக்கத்திற்காக பிரிவினைவாதத்தை தூண்டும்-இனரீதியில் பாமரமட்டத்தில் எடுபடக்கூடிய அம்சங்களை நன்கு பயன்படுத்திக்கொண்டனர் தேர்தல் தொகுதியில் வெற்றி பெறுவதானால் இந்த மலிந்த பாமரத்தனமான அரசியலுடன் தன்னைத்திட்டவட்டமாக இனங்காட்டிக் கொண்டாலே ஆகும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று ஆகிவிட்டது. அரசியல் அதிகாரத்தை அடைவதற்கான அழுதிப்வழி பழைய, இனவாதப்பிரிவினைவாதப்போக்குத்தான் என்பது நியாயமாகிப் போய்விட்டது நிலையான தேசிய குணாம்சத்தைத வளர்த்தெடுக்கக்கூடிய ஆற்றலை இந்தஉயர்குழுவினர் இழந்து போனதை இதுவெளிப்படுத்தியது. இதில் தான் 1966பொதுத்தேர்தலின் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. சிங்கள ஜனரஞ்சக சக்திகளின் மத்திய-இடதுசாரிக்கூட்டணி எஸ்.எல்.எப்.பி ஸ்தாபகர் பண்டாரநாயக்க தஜலமையில்தெற்கில் வெற்றி பெற்றபோது தமிழரசுக்கட்சி வடக்கே தமிழர் மத்தியில் வெற்றியீட்டியது. சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையே அரசியல் யயாப்பூர்தியில் சில மாற்றங்கள் செய்துகொள்ள இது அனுகூலமாக அமைந்தது.

பண்டாருநாயக்கா ஆட்சிக்குவந்ததும் 1956ல் சிங்கள மொழியை உத்தியோகபூர்வமான மொழியாக்கும் தமது தேர்தல் வாக்குறுதியினை உடனடியாக நிறைவேற்றினார். கல்வியாலும், வேலைவாய்ப்பிலும் தாம்பாதிக்கப்படுவோம் என்ற தமிழர்களின் அச்சத்திற்கு இது நெய்யூட்டியது. இதனைவிட ஆபத்தானது என்னவெனில் தேசிய ஒற்றுமைக்கு ஊறானி விளைவிக்கக்கூடிய நிலைப்பாடுகளை பண்டாரநாயக்கா மேற்கொள்ளவேண்டுமென்று அவரை அதிகாரத்திற்குக் கொண்டவந்த சிங்கள-பௌத்த குழுவினர் நிர்பந்தித்தபோது அவரால் அவர்களைக்கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாமல் போனதுதான். இதனையடுத்து தமது சிங்கள மொழிக்கொள்கை தமிழர் மீது ஏற்படுத்திய பாதகமான விளைவுகளுக்கு நிவாரணம் காணும் தேவை ஏற்பட்டது. இதற்காக தமிழ் மொழியைப்பாவிப்பது பற்றிய விஷேச மசோதாக்களுடன் தமிழரசுக்கட்சி தலைவர் செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மாவட்ட சபைகளுக்கு அதிகாரப்பரவலாக்கம் வழங்கப்படுவதையும் பண்டாரநாயக்கா ஏற்றுக்கொண்டமையை சிங்களத் தேர்தல் தொகுதிகளில் உள்ளார்ந்து காணப்பட்ட சிங்கள குறுகியவாதமும், எதிர்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி-யூ என் பியின் அரசியல் சந்தர்பவாதமும் முறியடித்துவிட்டன.

சுதந்திர இலங்கையில் முன்னென்றுமில்லாதவாறு 1958லும்1956லும் பயங்கர சிங்கள-தமிழ் கலவரங்கள் நடைபெற்றன. இவை1983ன்பயங்கர இனப்படுகொலைவரை தனது முர்கத்தனமான தீவிரத்தைக்காட்டுவதில் முடிந்தது.

இதனையடுத்து பத்தாண்டுகாலப் பகுதியில் சிங்கள தமிழ் இன உறவுகள் மோசமாசீர்குலைந்து போய்க்கொண்டிருந்தபோதிலும்பாராளுமன்றத்தில் அரசியல் இணக்கம் காண்பதில் தமிழர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

தொடரும்.....

www.tamilarangam.net

# இலங்கையில் பெண்கள்

"இந்தியத் தோட்டத் தொழிலாள பெண்களுக்கும் வாக்குரிமை வழங்க வேண்டுமா ? " என்று டொனமூர் பிரபு எங்களிடம் கேட்டார்.

"நிச்சயமாக! அவர்களும் பெண்கள் தான்; நாங்கள் எல்லாப் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப் படவேண்டும் என்று தான் கேட்கிறோம்," என்று நாங்கள் போராட்ட உற்சாகத்தோடு அவருக்குப் பதில் கூறினோம்.

—1927 இல் டொனமூர் விசாரணைக்குழுவின் முன் அக்னிஸ் டீ சில்வா என்ற பெண்மணி.—



இலங்கையில் பெண்களது இயக்கம் ஒரு தனியான வரலாறுகொண்டது. ஏனைய அன்டை நாடுகளைப் போன்று மனைவி உடன்கட்டை ஏறுதல் பெண்களை மூடி மறைத்து வைத்தல் ஆகியவற்றால் இலங்கைப்பெண்கள் துன்பத்துக்குள்ளாகவில்லை. 1975 வரை பெண்கள் பல முக்கியமான முன்னேற்றங்களைப்பெற்றுள்ளார்கள். அரசியலுரிமை மாத்திரமன்றி வேலை வாய்ப்பு கல்வி, எழுத்துவாசினை-83%, சுகாதாரம்-சராசரிவயது67, குழந்தைப்பேறின்போது இறப்பு 1000 க்கு 1.2% போன்றவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கைப் பெண்களுக்கு வாக்குரிமை 1931 ம் ஆண்டிலேயே கிடைத்துவிட்டது.

www.tamilarangam.net

பிராமணியக் கருத்துக்கள்/சிந்தனைகள் சிங்கள தமிழ் கலாச்சாரத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. அதாவது, பெண்களின் முக்கியமான கடமை மனைவியாக இருத்தல், தாயாக இருத்தல். அத்தோடு அவர்கள் மூளையற்றவர்கள், நிரந்தரமற்றவர்கள், உணர்ச்சிவசப்படுபவர்கள், சூழ்ச்சியுடையவர்கள், ஆண்களை வழிதவறச்செய்யும் குணங்கள் கொண்டவர்கள் என்பதாகும் மேலும் அவர்கள் தங்களை அழகாக வைத்திருப்பதும் முக்கிய கடமையாக்கப்பட்டுள்ளது.

பௌத்தசமயம் பெண்களின் சமூகத்துறையில் சில மாற்றத்திற்கு ஒரு பாதையை வகுத்தது. பிராமணிய நடைமுறைகளின்படி பூசகர்களாக ஆண்கள் மட்டுமே ஏக போகம் கொண்டிருந்த அதே வேளை பௌத்த மதத்தில் பெண்களும் துறவிகளாக முடிந்தது. எனினும் பெண்துறவிகள் ஆண்துறவிகளுக்கு கீழ்ப்பட்டவர்களாகவே இருந்தனர்.

சிங்கள தமிழ் மக்களிடையில் சீதனம் திருமணச்சடங்கில் ஒரு முக்கிய பாத்திரத்தினை வகித்தது நவீன சமுதாயத்தில் சீதனம் ஒரு வியாபாரப் பொருளாகமாறியமையால் திருமணம் என்பது இரு உள்ளங்களுக்கிடையே ஏற்படும் ஒரு தார்மீக ஒப்பந்தம் என்ற நிலையிலிருந்து விலகியுள்ளது. சீதன ஒழிப்புப் போராட்டம் இலங்கைப் பெண்கள் மத்தியில் முக்கிய இடத்தை இன்றுவரை பெறவில்லை. 1938 ம் ஆண்டு, சீதனம் கொடுப்பதையும் வாங்குவதையும் தடுப்பதற்கான பிரேரணை சட்டசபையில் கொண்டு வரப்பட்ட போது ஒரு வாக்கினால் தோற்கடிக்கப்பட்டது

மத்தியதர வகுப்பு பெண்கள் கல்வி, வாக்குரிமை, சம அரசியலுரிமை ஆகியவற்றுக்கு போராடிக் கொண்டிருந்த போது, தொழிலாளி வர்க்க பெண்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம சம்பளம், வேலை செய்யுமிடத்தில் தேவையான மனிதாபிமான வசதிகள் (                ) ஆகியவற்றுக்காக போராடினர்.

முழு இலங்கையிலும் தேயிலைத் தோட்டப்பகுதிப் பெண்களைப் பொறுத்தவரையில் குறைந்த ஆயுள் குழந்தைப்பேறின்போது இறப்பு ஆகியன மிக அதிகமாகவும் கல்வி வாய்ப்பு மிகக்குறைவாகவும் காணப்படுகிறது.

தொழிற் சாலைகளில் மிகக்குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளர்கள் சாதாரணமாக பயிற்சியற்ற பெண்களாகவே காணப்படுகின்றனர்.

வீடுகளில் வேலைக்காரர்களாக இருப்பவர்களில் பெரும்பான்மையினர் பெண்களாவார்கள். இவர்கள் அரை அடிமைகளாகவே வாழ்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவசாயப் பெண்கள் ஆண்களுடன் கமத்தில் வேலை செய்த போதிலும் சில வேலைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது

ஏகாதிபத்திய வருகைக்கு பின்னர் இப்பாரம்பரியங்களில் தாக்கம் ஏற்பட்டு மாற்றத்திற்குள்ளாகின. ஒரு சமூக வழக்கமாகிய திருமணத்தில் அந்நிய ஆதிக்கம் மாற்றத்தினை ஏற்படுத்தியது. ஒல்லாந்தர்கள் பிதாவழி ரோமன் டச்சு சட்டத்தினை நடைமுறைக்கு கொண்டுவந்தனர் ஆங்கிலேயர் ஒருதார திருமணத்தையும் திருமணப்பதிவையும் நடைமுறைப்படுத்தினர்.

கல்வியின் தாக்கம் மரபுவழிமுறையில் வீட்டோடேயே ஒட்டியிருந்த பெண்களை, வீட்டுக்கு வெளியே கொணர்ந்து வெளிவேலைகளிலும் பங்கு கொள்ளச் செய்தது. மேலும் இக்கல்வியானது பழைய மரபு முறை தமது முன்னேற்றத்திற்கு எந்த வகையில் தடையாக இருந்தது என்பதை காணத்தக்கதாக அவர்களது கண்களை திறக்கச்செய்தது. கல்வியின் விரிவாக்கம் மத்தியதர வர்க்கப் பெண்களை உருவாக்கியது. முக்கியமாக ஆசிரியைகள் வைத்தியர்கள் ஆகியோரை உருவாக்கியது. மேலும் அரசியல் விழிப்புணர்ச்சியும் பெண்கள் மத்தியில் ஏற்பட்டது. இருந்தபோதிலும் அரசியலில் பெண்களின் பங்கு மிகக்குறைவாகவே உள்ளது. (ஒருபோதும் 4%க்கு அதிகமாகவில்லை) அனேகமான பெண்கள் கணவன் அல்லது தந்தை இறந்ததன் காரணத்தாலேயே அரசியலில் புகுந்தார்கள். அதாவது ஒரு ஆணுடைய போர்வைக்கூடாகவே அவர்கள் அதிகாரத்துக்கு வரமுடியும் போல் தோன்றுகிறது இதற்கு ஓர் சிறந்த உதாரணம் சிறிமாவோ பண்டாரநாயக்கா. சில தீவிரவாத பெண்கள் தங்களது கடமை இடதுசாரிகளை ஒற்றுமைப்படுத்துவதும் சோஷலிசத்தை ஏற்படுத்துவதும் பெண்களுக்கு காட்டப்படும் பாரபட்சத்தினை ஒழித்தலும் என்று கருதினார்கள்.

பெண்களுக்கு கல்வி அரசியல் ? நீதிசமத்துவம் ஆகியவற்றில் ஏற்பட்ட வெற்றிகள் பூர்ஷுவா குட்டி பூர்ஷுவா வர்க்கப் பெண்களுடனேயே மட்டுப்பட்டு நின்றது இந்த வெற்றி பிதாவழி சமூக அமைப்பையோ அல்லது குடும்பத்தில் கீழ்ப்பட்டவர்களாக இருக்கும் நிலைமையையோ, மாற்றவில்லை.

வளர்ந்துவரும் நவீன தொழில் துறையில் அதிக தொழிலாளர்கள் தேவைப்படுவதனால் "அபிவிருத்தியில் பெண்களின் பங்கு என்ற ஒரு சித்தாந்தம் உருவாகியது.

தாராள மனப்பான்மையுடைய பெண்நிலைவாதிகளது நிலைப்பாடு கீழ்க்காணும் வகையில் உள்ளது.

1) பெண்கள் விடுதலைபெற வேண்டும். அரசியல், சட்டம், பொருளாதார உரி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மைகள், கல்வி, வேலை-வாய்ப்பு, அரசியலில் தீர்மானம் எடுத்தலில் பங்கு என்பவற்றில் ஆண்களைப்-போன்று சமவாய்ப்புக்கள் இருத்தல் வேண்டும்.

2) வருமான உற்பத்தித்துறையில் பெண்களை ஈடுபடுத்துவதன் மூலமும்புதிய வேலை வாய்ப்புக்களை வழங்குவதன் மூலமும் முழுப் பொருளாதார அபிவிருத்தியிலும் பெண்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தாராள மனப்பான்மையுடைய பெண்நிலைவாதிகள் தற்போதைய பொருளாதார அமைப்பினை ஏற்றுக் கொள்வதுடன் சகல நாடுகளும் மேற்கத்தைய முதலாளித்துவ வளர்ச்சி வழியில் முன்னேற முடியுமென்றும் இதற்கு பழைய மரபு சம்பிரதாயங்களில் சீர்திருத்தமும் சமூக அமைப்பை நவீனமயப்படுத்தலும் அவசியம் என்று கருதுகின்றனர். இமேலும் இதுவரை கால இந்த வகை நவீனமயப்படுத்தலின் பலாபலன்களை ஆண்களே தனித்து பெற்றுள்ளனர் என்றும் புதிய திட்டங்கள் தீட்டுவது முக்கியமானது என்றும் அதன் மூலம் பெண்களையும் இவ்வளர்ச்சியில் ஈடுபடுத்தி இவ்வுற்பத்தி வளர்ச்சியில் அவர்களையும் சேர்த்தல் வேண்டுமெனக் கருதுகின்றனர்.

• • • • • •

# நவ கொலனித்துவம்

**ஃபீலிக்ஸ் ம்ன்தாலி**
(Felix Mnthali)

எல்லாவற்றிலும் முக்கியமாய்த்
தராதரங்களை வரையறுப்பீர்,
விழுமியங்களை எடுத்துரைப்பீர்
வரையறைகளை வகுப்பீர்,
எல்லைக்கோடுகளைத் திணிப்பீர்
நும்மிடம்
விண்வெளியிற் சஞ்சரிக்கும் கலங்கள் இல்லாவிடினும்
பெறுமானமுள்ள ஆயுதங்கள் இல்லாவிடினும்
உலகைநீவிர் ஆள்வீர்

www.tamilarangam.net

நீவிர் என்ன பாட்டை இசைப்பினும்
அவர்கள் ஆடுவார்கள்
நீவிர் என்ன குப்பையைக் கொட்டினாலும்
அவர்கள் சுவைப்பார்கள்
அவர்களது அரிய கனிப்பொருட்களையும்
அவர்களது வளமான வனங்களையும்
நீவிர் விரும்பிய வண்ணமே
பொறுக்கி எடுக்கலாம்

அவர்கள் அஞ்சி நடுங்கி
நம்மிடம் வருவார்
ஏனெனின்
நீவிர்செய்த விதிகட்கமைய
விளையாட்டு ஆடப்படுகிறது
எனவே, நீவிர் வெல்லும் போதே
விளையாட்டு ஆடப்படும்.

எல்லாவற்றிலும் மேலாக
விழுமியங்களை எடுத்துரைப்பீர்
தராதரங்களை வகுப்பீர்
மூன்றும் உலகம்
நம்மடியில் விழுவதை
உட்கார்ந்து பார்ப்பீர்.

தமிழில்: மணி

மலாவியப்பெற்றோருக்கு 1933இல்ஸிம்பாப்வேயில் பிறந்த பீலிக்ஸ் ம்ன்தாலி அங்கும் லெசோதோவிலும் கனடாவிலும் கல்விபயின்றார். மலாவி பல்கலைக்கழகத்திலும் பின்னர் பொத்ஸ்வானா பல்கலைக்கழகத்திலும் ஆங்கிலப்பேராசிரியராகப்பணியாற்றியவர். 1982இல் இவரது முதலாவது கவிதைத்தொகுதி பிரசுரமாயிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் கருத்துக்கள்

அன்புள்ள அ ஆ இ
ஆசிரியர் அவர்கட்கு,

என்ன இது? ஒல்லாந்திலிருந்து இப்படி ஒரு தமிழிதழா? ஆச்ச'ரியமும் ஆனந்தமுமாக இருக்கிறது. எனக்கும் உங்கள் எல்லா இதழ்களையும், விபரங்கயையும் அனுப்புவீர்களா?

இளைய அப்துல்லாஹ்

தமிழினத்தின் மதிப்புக்குரிய
அ ஆ இ பத்திரிகை ஆசிரியர்
அவர்கட்கு,

வெளிநாடுகளுக்கு வந்து தனது தாய் மொழியைப்பேசுவதற்கே அவமானப்படும் எமது சமுதாயத்தினிடையே குன்றின்மேல் விளக்குப்போல் ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ் தீனி போடும் உங்களுக்கும், ஆக்கங்களுக்கு மெருகூட்டி அழகோடு எமக்கு அளிக்க உதவும் நண்பர்களுக்கும், உங்கள் அளப்பரிய இச்சேவை ஆல்போல் தளைத்து அறுகுபோல் படரவும் என் வாழ்த்துக்களைக் கூறிக்கொண்டு உங்கள்தமிழ் சேவை இத்துடன் நிற்காமல் தொடரட்டும்.

இன்றைய நிலையில் எமது நாட்டில் ஒரு நேர உணவுக்குக்கூட வழியின்றி பட்டினிச்சாவுகள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. எமது நாட்டைப்பொறுத்தவரையில் அன்றாடம் வேலைசெய்து தமது சீவியத்தையோட்டும் வறியவர்களின் தொகைதான் அதிகம். இன்று இவர்களின் நிலையினை விபரிக்க முடியாது. இவர்களுக்காக இரங்குபவர்கள் எமதுநாட்டில் எவருமிலர். வெளிநாடுகளில் இருக்கும் எம்போன்றவர்கள் கேளிக்கைகளுக்காக செலவிடும் பணத்தில் ஒருபகுதியையேனும் அவ்வறியவர்களுக்காக அனுப்பினால் அவர்களது இறப்புக்களை சிறிதளவாவது கட்டுப்படுத்த முடியுமென கருதுகின்றேன். சிறுதுளி பெருவெள்ளமாகும். இவ்வேண்டுகோளை உங்கள் பத்திரிகைமூலம் வெளிப்படுத்தி ஒரு சிறந்த ஸ்தாபனம் மூலம் உண்மையானவர்களுக்கு கிடைக்க வழிசெய்யலாம்.

துரை
ஒல்லாந்து


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலங்கள் மாறும்! உலகக் காட்சிகள் மாறும்!

## - GREEN HOUSE EFFECT -

பத்ம மனோகரன்

காலநிலைக்கும் மனித வாழ்வுக்குமான தொடர்பை; உண்பதும், உடுப்பதும், உறைவதும் தொடக்கம் வசந்த காலம் வருமா என்று ஏங்குவதும், இலையுதிர் காலக் கனவுகள் காண்பதும், கோடையில் ஒரு நாள் மழை வருமா என்று வர்ணத்தைப் பார்ப்பதும் வரை மனித வாழ்வின் ஒவ்வொரு அணுவையும் அது எவ்வாறு நிர்ணயிக்கிறது என்பதை விபரிக்கத் தேவையேற்பட்டதில்லை.

நமது முன்னோர் தம் சூழலின் காலநிலையை ஒட்டி ஆறு வகை பருவகாலங்களாகப் பிரித்தனர். ஐரோப்பியர்கள் நான்கு பருவ காலங்களாக வகுத்தனர். இந்தப் பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடையும் காலநிலையானது குறிப்பிட்டதொரு பருவகாலத்தில் மாறாதவொரு குறித்த கால நிலையைத் தான் கொண்டு வருகின்றது என்று கூறமுடியாது.

இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்தோன்றிய விண்ரர்/குளிர்காலம் இப்போது தோன்றும் விண்ரர் போல் இல்லை என்று இந் நாட்டு உழவர்கள் அதிருப்தி கொள்வதை நாம் கேட்டிருக்கலாம்.

உயிரினங்கள் தகாத கால நிலைக்குத் தப்பித்து உயிர் வாழத் தம்மை உறங்கு நிலைக்குத் தயார் செய்கின்றன. அன்றைய ஆதி கால மனிதன்- Ice age - உலகெங்கும் பனிமூடியிருந்த காலத்தில் வாழ்ந்த அந்த மனிதன் தன்மை எவ்வாறெவ்வாறெல்லாமோ அந்த உலகைஆக்கிரமித்த கடும் குளிர்காலத்திலும் வாழ்ந்து விட முயன்றிருக்கிறான். இக் கால நிலைக்கு ஈடுகொடுக்க முடியாத ஜீவராசிகள்.- தாவரங்கள் இறந்தொழிந்தன. அவை இன்று உலகில் கிடைக்கமுடியாதவை.

www.tamilarangam.net

உலகந்தோன்றிய காலத்தில் இருந்து இயற்கையின் ஜாலவித்தையால் உலகம் தீப்பிழம்பாகவோ பல ஆயிரம் வருடங்களீ தனி மழைக்காலமாகவோ இருந்ததும் அதன்பின் மாறியதும் எல்லாம் இயற்கையால்! இன்றோ ஒரு பயங்கரமான கால நிலைமாற்றமொன்று, இயற்கையால் இல்லாமல், இன்றைய மனிதரே காரணமாகி நடைபெறப் போகின்ற அச்சுறுத்தல் யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை நாம் நம்பித்தான் ஆகவேண்டும்.

நாகரிக மனிதனின் வாழ்வும் அதற்கான அடிப்படைத் தேவைகள் ஆடம்பரத்தேவைகள் என்று இன்று தவிர்க்க முடியாததும், தவிர்க்கக் கூடியதுமான தேவைகள் பல்கிப் பெருகித் தொழிற்சாலைகளின் புகை போக்கிகள்விரிந்தன! வானத்தை அவற்றின் விரிந்த வாய்களே ஆக்கிரமித்துக் கொண்டன.

எங்கெங்கெல்லாம் சக்தியைப் பிறப்பிக்க முடியுமோ அங்கிங்கெல்லாம் அது பிறப்பிக்கப் பட்டது. அணுஉலைக்கூடங்கள் எழுந்தன. மின்சாரம்; காஸ் (GAS )எமக்குக் கிடைக்கிறது. பிரச்சனையில்லாமல் சுடுநீர் வருகிறது. சமையல் நடக்கிறது. வசதியாக வாழப்பழகிவிட்ட இன்றைய மனிதனின் அதிக அளவிலான சக்தி உபயோகமே காலநிலையில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு மூலகாரணமாகும்.

வளிமண்டலமே பெரும்பாலும் காலநிலையை நிர்ணயிக்கிறது. உலகப்பந்தைச் சூழ உள்ள வளிமண்டலம் தான் உலகப் பாதுகாப்புப் போர்வையாக இருக்கிறது. இதை நாம் எமது கம்பளிப் போர்வைக்கு ஒப்பிடலாம்.

சூரியனில் இருந்து வரும் கதிர்களில், உலகிற்குத் தீங்கான ஊதாக் கதிர்களை— (                )த் தடுத்து தேவையானவற்றை ஊடுபுகவிடும் வடிகட்டியாகவும், பூமியின் வெப்ப இழப்பைத் தடுத்து கம்பளியாகவும் வளிமண்டலம் உலகைக் காக்கிறது.

இயற்கையாகவே ஒரு குறிப்பிட்ட வீதங்களில் கலந்துள்ள பல வாயுக்களின் சேர்க்கையே வளிமண்டலமாகும்.

இந்த வாயுக்களில் காபனீரொட்சைட் ($CO_2$) மீதேன் ($C_2H_4$) ஒசோன் ($O_3$) போன்றனவும் அடங்கும்.

இவை பூமிப் பரப்பில் இருந்து வளிமண்டலத்தைச் சேருமாயின் வளிமண்டலத்தில் இயற்கையாகவே இருக்கும் வாயுக்களின்

www.tamilarangam.net

விகிதநிலையில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் வளிமண்டலத்தில் உள்ள சமநிலை ( ) சீர்குலைக்கப்படும். இதனால் வளிமண்டலம் தன் இயல்பை இழக்கிறது. தனது, இயல்பானதும் இயற்கையானதுமானவற்றைச் செய்வோ சிறந்தமுறையில் இயங்கவோ முடியாது போய் விடுகிறது.

இவ்வாயுக்கள் அதிக அளவில் வளிமண்டலத்தைச் சென்றடைவதனால் பூமி வெப்பத்தைக் கடத்த முடியாது, அதிகளவு வெப்பத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது. இதனால் பூமியின் வெப்பநிலை அதிகரிக்கின்றது.

இவ்வகைச் செயற்பாட்டு ஒழுங்கு ஒர்குளிர்நாட்டில், வெப்பவலையத் தாவரங்களை வளர்ப்பதற்கு அமைக்கப்படும் கண்ணாடி வீடுகளை (GREEN HOUSE :- வெப்ப வலையக் காலநிலையை உள்ளே உள்ள தாவரங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் கண்ணாடி வீடு)

ஒத்ததாக வே இருக்கிறது. இதனால் இவ்வாறான விளைவு GREEN HOUSE EFFECT - வெப்பவீட்டு விளைவு என்று கூறலாம். இம்மாற்றத்தை ஏற்படுத்தும் வாயுக்களை Green home gases - வெப்ப வீட்டு வாயுக்கள் என்று கூறப்படுகிறது.

காபனீரொட்சைட் ($CO_2$) வெப்ப வீட்டு விளைவை (Green house effect) ஏற்படுததுவதில் முக்கிய காரணியாகும். இவ் வாயு நிலக்கரி, எண்ணை, நிலக்கீழ்வாயு ( )

எமது அன்றாடத் தேவைக்கான சக்தியைப் பெற நிலக்கரி, எண்ணை, நிலக்கீழ்வாயு (Natural Gas) போன்றவற்றை எரிக்கும் போது உருவாகிறது.

மின்சக்தி உருவாகும் நிலையங்கள், தொழிற்சாலைகள், மோட்டார் வாகனங்கள், வீடுகள் என்பவற்றில் இவ் வகையான எரிதல் நடைபெறுகின்றது. ஒவ்வொரு வருடமும் அதிக அளவு சக்தியை நாம் உபயோகிப்பதால் தொடர்ந்து காபனீரொட்சைட் வளிமண்டலத்தைச் சென்றடைகிறது.

வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டை( ) தாவரங்கள் உள்ளெடுத்து ஒட்சிசனாக மாற்றி வெளிவிடுகின்றன. ஒட்சிசன் உயிரினங்களின் சுவாசத்திற்கு அத்தியாவசியமானது. காடுகளை அழித்து எரிப்பதனால் காபனீரொட்சைட் பெருமளவில் உருவாகிறது. காடுகளை வெட்டியபின் புதிய தேவைக்குத் தக்கதான மரங்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை வளர்க்காமையால், உருவாக்கப்பட்ட காபனீரொட்சைட் ஒட்சிசனாக மாறமுடியாதுள்ளது.

இதனால் வளிமண்டலத்தை அதிகளவு காபனீரொட்சைட் நிறைத்துக் கொள்கிறது.

வெப்பவீட்டுவிளைவுகளுக்கு-Green house effect மீதேன்( ) ஒசோன்($O_3$) மற்றும் குளோரின், Fபுளோரின் போன்றவைகளை உள்ளடக்கிய வாயுக்களும் காரணமாகும், விவசாய உற்பத்தி மிருகப்பண்ணைகள் என்பவற்றிலிருந்து, இயற்கை வழியாக உக்குவதாலும், ஜீரணிப்பதாலும் மீதேன்- வாயு உருவாகிறது இவ்வாயு வளிமண்டலத்தை வந்தடைந்து வெப்பவீட்டை- Green house பலப்படுத்துகிறது.

தொழிற்சாலைகளில் நடைபெறும் உற்பத்தி, போக்குவரத்து, மோட்டார் வாகனங்களினாலும் ஒசோன் வாயு வளிமண்டலத்தைச் சென்றடைகிறது.

குளோரின்- , புளோரின் போன்ற வாயுக்கள் தொழிற்சாலைகளிலிருந்தும், குளிர்சாதனப் பெட்டிகளிலிருந்தும், சிறு துளிகளாக விசிறும் தெளிகருவிகளிலிருந்தும் (Spray) வளிமண்டலத்தை வந்தடைகிறது.

வெப்பவீட்டின் -Green house முக்கிய விளைவு பூமியின் சராசரி வெப்பநிலையை அதிகரிக்கச் செய்வதாகும். இந்த வெப்பநிலையால் பூமியின் துருவப் பகுதிகளிலிருக்கும் (Pole) சமுத்திரத்தின் நீர் மட்டம் உயரும். இவ்வுயர்வின் காரணமாக நீர் மட்டம் நிலமட்டத்திற்குச் சமமாகும் போது பல நாடுகள் கடலால் உட்கொள்ளப்படும் அபாயமுண்டு. பல நாடுகளில் உள்ள நீர்நிலைகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதில் பல பிரச்சனைகள் எழும். நீர்நிலைகள் அழிந்து போவதனால் பல நாடுகளில் குடிநீர்த்தட்டுப்பாடும், வனாந்தரமாக மாறும் நிலையினையடையும் சாத்தியங்கள் உண்டு.

குடிநீர்த் தட்டுப்பாடு அகோரமான வெய்யில், சூறாவளி, கடும் புயல் வெள்ளப் பெருக்கு போன்றவை அடிக்கடி வரலாம். இயற்கை எப்போதும் ஒன்றுடனொன்று தங்கியுள்ளது. வெப்பநிலை அதிகரிப்பதனால் இயற்கையின் சமநிலையில் -(Balance) குழப்பம் ஏற்படுகிறது. இதனால் பல தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் (வெட்டுக்கிளி) நோய் காவும் பூச்சிகள் (மலேரியா நுளம்பு) போன்றவை பல நாடுகளில் பெருகலாம். அப் பூச்சிகள் பல மரங்களையும், செடிகளையும், உயிர்

www.tamilarangam.net

களையும் கொன்றொழிக்கலாம். இப் பூச்சிகளின் பெருக்கத்தினால் வேறு பல உதவியான பூச்சிகளும், மிருகங்களும் அழிக்கப்படலாம். இவ்வகையான மாற்றங்களைத் தவிர்ப்பதற்காகவும், இயற்கையை உரிய முறையில் பாதுகாப்பதற்கும் அக்கறையானவர்கள் உலகின் பல நாடுகளில் பல்வேறு கலந்த ஆலோசனைகளிலும், ஆய்வுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

---

சென்ற இதழ் தொடர்....

## நோய்க்குறிப்பு

# சலரோகம்

**சலரோகம் பரம்பரையான நோயா?**

சிலநோய்கள் பரம்பரையாககாணப்படுவதுஆயினும் சலரோகநோயைப்பொறுத்தவரை மிகத்தெளிவாகத்தெரிவதில்லை. இது பரம்பரைநோயல்ல, ஆனால் பரம்பரையாகவருவதற்கான சந்தர்பமும்உண்டு. இன்நோயுள்ள பெற்றோர்கள் நோயற்றகுழந்தைகளைப்பெறமுடியும். இவ்வாறு தேக ஆரோக்கியமான பெற்ரோர்சலரோகநோயுள்ள குழந்தைகளையும் பெறமுடியும்.

**சலரோகம்ஏற்படுவதை தூண்டக்கூடியகாரணிகள்.**

1. அளவிற்கதிகமான உடல்நிறை.
2. வயதில் முதுமையடைதல்.
3. விபத்து அல்லதுகடுமையான நோய்.
4. சத்திர சிகிச்சை.
5. ஸ்ட்ரைஸ்(        ).
6. சிலமருந்துகளை(          )பயன்படுத்துதல்.
7. வைரஸ்நுண்மிகள் தொற்றியிருத்தல்.

பெரும்பாலும்சலரோகம் வருவதற்கான காரணங்கள் தெளி

வற்றதாகவேயுள்ளது.

பெண்கள் கருத்தரித்திருக்கையில் வேறொரு வகையான சலரோகம் உருவாகிறது இது தற்காலிகமானதாகும்.

<u>சலரோகம்யார்யாருக்கு வருவதற்கான சாத்தியங்களுண்டு?</u>

எவரும் இந்நோயினால் பீடிக்கப்படலாம். எல்லா இனத்தவர்களுக்கும், எந்த வயதினருக்கும் எந்த நாடுகளாயினும் வருவதற்கான சாத்தியங்கள் உண்டு.

சலரோகநோயில் இன்சுலினில் தங்கியுள்ள சலரோகமானது ஆயிரம்பேருக்கு ஆறுபேர்வரையில்காணப்படுகிறது. இதேபோல் இன்சுலினில் தங்கியிராத சலரோகமானது ஆயிரம்பேருக்கு இருபது (20) பேர்களுக்கு வருவதாகஅறியப்பட்டுள்ளது.

சலரோகநோய் காணப்படும் ஒருவர் தமதுஉணவில் மிக கவனமெடுத்து, எவ்வகை உணவுகளில் எவ்விதசத்துக்கள் காணப்படுகிறதென்பதை அறிந்து தேவையானஉணவுகளைமட்டுமே பயன்படுத்துதல் வேண்டும்.

<u>எமது உணவுகளில் எவ்வகைச்சத்துக்கள் காணப்படுகிறது?</u>

1. காபோவைதரேற்றுக்கள்.
   (சீனி, மாப்பொருள், பாண், உருளைக்கிழங்கு, அரிசி, பழவகைகள்.)
2. கொழுப்பு
   (வெண்ணெய் (butter), மாஜரீன், சீஸ், இறைச்சி)
3. புரோட்டின்
   (இறைச்சி, முட்டை, பயிற்றங்காய், பருப்பு, கடலை, நைட்ரஜன்நிறைந்தஉணவுகள்.)
4. விற்றமின்கள், மினரல் (உப்புபோன்றபொருட்கள்) நீர்.

மேற்குறிப்பிட்ட இவ்வகைப்பொருட்கள் ஒவ்வொன்றும் உடலில்வேறுபட்ட காரியங்களைப்புரிகின்றன.

காபோவைதரேற்று விரைவில் பயன்படக்கூடியதான சக்தியைவேகமாக வழங்கக்கூடியது.

கொழுப்பு பிற்பாவிப்பிற்காகசேமித்துவைக்கப்படும் ஒரு சக்தியாகும்.

புரோட்டினானது, உடலை வளர்ச்சியடையச்செய்வதற்கும், நோய்களைக்குணமடையச் செய்வதற்குமான முக்கியஉணவாகும்.

விற்றமினும், மினராலும் மேலும் பல கடமைகளைப்புரிகின்றன.

இரத்தத்திற்கு குளுக்கோசைக் கொடுக்கும் மிக முக்கியமான உணவு காபோவைதரேற்றாகும். குறிப்பாக சலரோகமுள்ள ஒருவரின் எவ்வளவு எவ்வகை

www.tamilarangam.net

யான காபோவைதரேற்ற உள்ளதென்பது முக்கிமானதாகும்.

உரளை. கிழங்கு, அரிசி, பாண் போன்றவற்றிலிக்கும் காபோவைதரேட்டுக்கும், இனிப்பு, சொக்லேட்டுக்கள், ஐஸ், லெமனாடோ ஆகியவற்றிலிருக்கும், காபோவைதரேட்டுக்கருக்கும், அவை இரத்தத்தில் குளுக்கோசாகசேரம்தன்மைகளில் வித்தியாசங்கள் உண்டு. இதனால் சலரோகநோய் உள்ளவர்கள் இனிப்புப்பண்டங்களை உண்பதில்அவதானமாயிருத்தல் அவசியம்.

முற்றும்.

---

பாரிசில் 13-7-91ல் நடைபெற்ற ஆய்வரங்கின் கருத்துக்கள் சிலமாற்றங்களுடன் வெளியிடப்படுகிறது

1993ல்

# ஒன்றிணையும் ஐரோப்பா

-மனோகரன்-

ஐரோப்பிய சமூகத்தைச் செர்ந்த 12 நாடுகள் தமது உள்நாட்டு எல்லைகளை 1993 ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியுடன் இல்லாமல் செய்யப் போகின்றன. அதன்பின் இந் நாடுகளுக்கிடையில் பொருட்களின் பரிமாற்றங்கள், போக்குவரத்துச் சேவைகள் என்பன தடையின்றி நடைபெறலாம். மூலதனமும், மக்களும் (சிலர் தவிர) தாராளமாகத் தடையின்றிச் செல்ல அனுமதிக்கப்படும்.

1957 ஆம் ஆண்டில் ரோமில் இந்நாடுகளுக்கிடையில் நடைபெற்ற ஒப்பந்தத்தை ஐரோபிய சமூகத்தின் இன்றைய இவ்வாறான செயற்பாட்டின் ஆரம்பமாகக் கருதலாம்.

அமெரிக்க, ஜப்பானிய பொருளாதார வல்லரசுகளின் சவால்களிற்கு எதிராக 330 மில்லியன் மக்களைக் கொண்ட ஒரு பொருளாதாரச்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்தையை உருவாக்கிய நிகழ்ச்சி 1987 ஆம் ஆண்டு அளவிலேயே நடந்தேறிவிட்டது.
ஒருபுறத்தில் ஐரோப்பியப் பாராளுமன்றம், அமைச்சரவை, ஐரோப்பிய சமூகம் எனப்படும் அமைப்பின் ஸ்தாபனங்கள் ஒரு போலி ஜனநாயக அமைப்பு முறையையே மேம்போக்காகக் காட்டுகின்றன. மறுபுறத்தில் அரசு இயந்திரம் அவ்வப்போது எழுந்த மானத்தில் ஏற்படுத்து கின்ற அமைப்புக்கள், இரகசிய ஸ்தாபனங்கள், அரசாங்கங்களுக்கிடையிலான தனிப்பட்ட அமைப்புக்கள், போன்றன ஐரோப்பிய அரசியல் வளர்ச்சியில் ஒடுக்குமுறைத் தன்மையைப் பிரதிபலிக்கின்றன.

இவை தங்களது நடவடிக்கைகளைப்பற்றி யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை இந்த அமைப்புக்கள் அனைத்தும் ஜனநாயக விரோதமானவையே அதிலும் இங்கு உருவாக்கப்படும். "மற்றைய" ஐரோப்பா ஆபத்தானதாகும்.

1976 ல் அமைக்கப்பட்ட ர்றெவி(TREVI ) அமைச்சர் குழு 1986 ல் அமைக்கப்பட்ட குடிவரவு அலுவல்களுக்கான தற்காலிக குழு, 1985, 1990 இல் உருவாக்கப்பட்ட செங்கன் (SCHENKEN) ஒப்பந்தம் என்பன இந்த ஐரோப்பிய சமூகத்தை கட்டி எழுப்புவதற்கு ஆதாரமாய் அமைந்த தளங்களாகும்.

சட்டம், ஒழுங்கு என்ற போர்வையின் கீழ் இவை அனைத்தும் குடிவரவு பற்றியே கூடிய கவனஞ் செலுத்துகின்றன. இத்துடன் ர்றெவி, செங்கன் ஆகிய அமைப்புக்களைப் பொறுத்தவரை பயங்கரவாதம், போதைவஸ்து, பொதுஒழுங்கு, பொலிஸ் நிர்வாகத்தில் சர்வதேச ஒத்துழைப்பு என்பன முக்கியம் பெறுகின்றன.

## ர்றெவி(TREVI) குழுமம்

பயங்கரவாதம், தீவிரவாதம், அதிதீவிரவாதம், வன்முறை ஆகியவற்றை அடக்குவதற்கான அரசுகளுக்கிடையிலான

ஒரு அமைப்பாக இது 1978 ல் அமைக்கப்பட்டது. இவற்றோடு மேலும் பொலிஸ் ஒழுங்குகள் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பவற்றையும் கவனிக்கும் வகையில் 1987 ல் இதன் நோக்கமும்

எல்லையும் விரிவாக்கப்பட்டது. வெளிநாட்டிலிருந்து குடி உள்வரவு, விசாவழங்கல், அகதிகள், எல்லைக்கட்டுப்பாடுகள் ஆகியனவற்றையும் இது உள்ளடக்கிறிருக்கின்றது.

இந்த அமைப்பின் பல்வேறு செயற்குழுக்களுக்குரிய நடவடிக்கைகள் இதன் உள் நோக்கங்களைத் தெளிவாக்குகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழு I

பயங்கரவாதம் பற்றி தனித்து ஆராயும் இக்குழு ஐரோப்பிய சமூகத்திற்கு உள்ளிருந்தோ, வெளியிலிருந்தோ ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் பற்றிக் கூட்டாக ஆராய்வதுடன் இவை தொடர்பான ஒருங்கிணைந்த பொது ஆவணங்களைத் தயாரிக்கின்றன. ட்றெவி இக்குழுவிற்குச் சமமாகவும் அதேசமயத்தில் இதற்கு வெளியிலும் தனித்த ஒரு பொலீஸ் செயற்குழு தீவிரமாகக் செயற்பட்டுவருகிறது.

மேற்குஐரோப்பாவின் விசேட உளவுத்துறையினர், பொலீஸ் ஏஜென்சிகள், பாதுகாப்புச் சேவையினர் ஆகியவற்றுடன் இணைந்து இக்குழு பயங்கரவாதம் தொடர்பான விடயங்களை மேற்கொள்கிறது.

இவர்கள் திரட்டும் தகவல்கள் அரசுகளுக்கிடையில் பரிமாறிக் கொள்ளப் படுகின்றன. மூன்றாம் உலகநாடுகளைச் சேர்ந்த விரும்பத்தகாத வெளியாட்களை பற்றிய தகவல்களும் இதில் அடங்கும்.

குழு II

பொலீஸ் ஒத்துழைப்பு இங்கு முதன்மை பெறுகிறது. பொலீசாருக்கு உதவியான நவீன உபகரணங்கள், கொம்பியூட்டர்கள் பயிற்சிகள், தடையவியல், போக்கிறன பற்றிய தகவல்கள் இக்குழுவினால் பரிமாறிக் கொள்ளப்படும்.

குழு III

1985 ல் அமைக்கப்பட்ட இக்குழு போதைவஸ்துக்கடத்தல் போன்ற பயங்கரக்குற்றங்களை எவ்வாறு தடுப்பது என்பது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மூன்றாம் உலகநாடுகளில் இதற்கான ஒருங்கிணைப்பு அதிகாரிகளை இவர்களே ஐரோப்பியசமூகமே நியமிக்கின்றார்கள். தேசிய போதைவஸ்த்து பற்றிய ஆய்வுப்பிரிவுகளையும் இக்குழுவே உருவாக்கும்.

குழு IV

ஐரோப்பிய பொதுச் சந்தையின் அமைப்பில் பொலீஸ் மற்றும் பாதுகாப்பின் ஒருங்கிணைப்பில் இக்குழு கவனஞ் செலுத்தும். ஐரோப்பிய பொதுச்சந்தையில் தனிப்பட்ட நாடுகளைப் பொறுத்தவரை பாதுகாப்பு, சட்ட நிறைவேற்றல் தொடர்பான துறைகளில் ஏற்படக்கூடிய சில இழப்புக்கள், நஷ்டங்கள் என்பவற்றிக்கு எந்த முறைகளில் இழப்பீடுகள் மேற்கொள்ளப்படலாம் என்பன பற்றியும் இது ஆராயும். இக்குழுவானது பல்வேறு மட்டங்களில் செயற்படுகின்றது. அமைச்சர்கள் மட்டத்திலும்

www.tamilarangam.net

முத்த அதிகாரிகள், சிவில் அதிகாரிகள் பொலீஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் உளவுஸ்தாபன அதிகாரிகள் என்ற பல மட்டங்கள் இவற்றுள் உள்ளடங்கும்.

59 நாடுகளைச் சேர்ந்த ஒரு பட்டியலில் உள்ள 115 நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் செங்கன் நாடுகளுக்குள் வருவதானால் விசா பெற்றிருக்க வேண்டும் என்று செங்கன் நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன, அனேகமாக தஞ்சம் கோரி வருபவர்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்வர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நடவடிக்கைகள் ஓர் "ஆய்வு கூடம்" போன்று அமைந்துள்ளது 1992 ம் ஆண்டு இறுதியில் 12 ஐரோப்பிய சமூக நாடுகளும் இவற்றை அமுற் படுத்த வேண்டும், ஏனெனில்12 நாடுகளும் இந்த 5 செங்கன் நாடுகளைப் போன்று அதே பிரச்சனைகளை எதிர்பார்க்கிறபர்கள்.

செங்கன் நாடுகளை விட வேறு நாட்டுப் பிரஜைகட்கும் ,அவர்களது செலவிற்கும் அவர்கள் நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கும் தேவையான பணவசதியிருந்தால் 3 மாதம் விசா வழங்கங்கப்படும்.

ஒருவரை "விரும்பத்தகாதவர்" என்றும் அல்லது பொதுஜன ஒழுங்கிற்கு ஆபத்தானவர், தேசியபாதுகாப்பிற்கு ஆபத்தானவர் என்றும் ஓர் செங்கன் நாடு கருதினால் அவருக்கு விசா மறுக்கப்படலாம்.

விமானப்பயணிகள் செங்கன் நாட்டின் விமானநிலையங்களை மாறி ஏறும் தளமாகப் பாவிக்கும் பொழுது அவர்கள் சென்றடையும் நாட்டிற்குள் நுழைவதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். போனபின் திரும்பும் பயணமும் உறுதியானதாக இருப்பதுடன் பயணிகளிடம் தேவையான பணவசதியும் இருத்தல் அவசியம்.அத்துடன் அவர்களின் பெயர் "விரும்பத்தகாதவர்களின்" பட்டியலில் இருத்தல் கூடாது.

போலிப்பத்திரங்களுடன் அல்லது அவசியமான பத்திரங்கள் இல்லாமல் பிரயாணஞ் செய்வோரை ஏற்றிச் செல்லும் விமான நிறுவனங்களுக்கும் அபராதம் போன்ற பணத் தண்டங்கள் அறவிடப்படும்.

செங்கன் நாட்டுக்குள் வரும் வேறு நாட்டுப் பிரஜைகள் மூன்று நாட்களுக்குள் கட்டாயமாகத் தம்மை உள்நாட்டு அதிகாரிகளிடம் பதிவு செய்தல் வேண்டும். செங்கன் நாடுகளில் ஒன்றில் எவராவது உரியநிபந்தனைகளை நிறைவு செ

www.tamilarangam.net

ய்யாவிட்டால் அவர் முழு செங்கள் நாடுகளிலிருந்தும் வெளியேற்றப்படுவார். செங்கன் நாடுகளுக்கிடையில் உள்ள சட்டங்கள் - அந்நாடுகள் பரஸ்பர பொலிஸ் ஒத்துழைப்புடனும் பாதுகாப்பு ஒழுங்குகள் மூலமும் வேறுறார் சக்கி வாய்ந்த கம்பியூட்டரில் உள்ளடக்கிய இரகசியங்களும் ,தகவல்களும் கொண்ட ஒர் அமைப்பு மூலமாக (S.I.S) அமுல் செய்யப்படும்.

இந்த எஸ்.ஐ.எஸ் பிரான்ஸில் உள்ள ஸ்ராஸ்பேர்க்கில் அமைந்துள்ளது. இதில் தஞ்சங்கோரியோரின் மனு, அதற்கு நிராகரித்துக் கொடுக்கப்பட்ட பதில், வெளியேற்ற வேண்டிய விபரம், அவர்களது தனித்த இருப்பிடங்கள் போன்ற தகவல்கள் என்பன சேகரித்து வைக்கப்பட்டிருக்கும்.

விசாவும் ,குடிவரவை ஒட்டிய விபரங்களையும் செங்கன் நாடுகளுக்குள் ஒழுங்கமைப்பதற்கு செங்கன் ஒப்பந்தம் தொழிற்படுவது மட்டுமன்றி சட்டத்தை மீறுவோரைத் தேடிப்பிடிப்பதற்கும் எவ்விதத்தில் செங்கன் நாடுகள் ஒன்று சேர்ந்து இவற்றைச் செயற்படுத்துவது என்பதற்கும் இது உதவுகின்றது. இவ்வொப்பந்தம் பொலிசாருக்கு செங்கன் நாடுகளில் ஊடுருவித் தேடுதல் நடாத்துவதற்கு சட்டம்இடங்கொடுக்கிறது.

ஐரோப்பியப் பாராளுமன்றம் 1989 ம் ஆண்டு ,இச் சட்டங்கள் மீது ஒரு அதிருப்தியை பின்வருமாறு அறிவித்தது.
" பொலிஸ் நடவடிக்கைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்பு,குடிவரவு விடயத்தில் அகதிகளுக்கு பாதகம் விளைவிக்கக் கூடிய சட்டங்கள் அனைத்தையும் இரகசியப் பேச்சு வார்த்தைமூலமும் ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு இல்லாமலும் அமுலுக்குக் கொண்டு வருவது ஜனநாயக இலக்குக்கு முரணானதாகும்."

செங்கன் ஒப்பந்தம் பொலிசாரால் வித்தியாசங் காட்டும் நடவடிக்கைக்கு இட்டுச் செல்வது மட்டுமன்றி தஞ்சங் கோரியோருக்கும்,குடியேறியவர்களுக்கும் தீங்கிழைக்கும். அத்துடன் தனிப் பட்டவர்களின் இரகசியங்களைக்கும்,அவர்களது சட்டவழியிலான பாதுகாப்பிற்கும் ஆபத்தை உண்டாக்கும்.

1992 ம் ஆண்டிற்குள் உள்ளூர்க் கட்டுப்பாடுகள் ஒர் ஒழுங்கிற்கு வருவதுடன் அதே நேரத்தில் ஐரோப்பிய நாடுகள் தங்களுது ஆதிக்கத்திற்கு அப்பால் தமது இராணுவத்தையும் இரகசியத் தொழிற்பாடுகளையும் புதிய யுத்தக் களங்களையும் தேடிய ஒர் ஆயத்த த்தை நாடுகிறார்கள்.

இதில் வளைகுடாவில் நடந்தேறிய பிரச்சனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கியமான புதிய ஐரோப்பாவின் இராணுவப் பங்கினை ஏற்படுத்தும் ஓர் செயல் முறையை துரிதப் படுத்தியுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் ஒரு பொதுவான வெளிநாட்டுப் பாதுகாப்புக் கொள்கையைத் தேடுகின்றன.

நாட்டோ (NATO) அணிக்கு ஐரோப்பாவிற்கு வெளியே இயங்க உரிமையில்லாத காரணத்தால் வளைகுடாவில் ஐரோப்பாவின் ஈராக்கிற்கு எதிரான ஆக்கிரமிப்பு மேற்கு ஐரோப்பியக் கட்டமைப்பின் (WEA) கீழே நடத்தப்பட்டது.

தற்பொழுது ஐரோப்பா தனது துருப்புக்களை யூக்கோசிலவியாவிற்கும், இத்துடன் நெதர்லாந்து தனது துருப்புக்களை ஐரோப்பாவின் உதவியுடன் போதைவஸ்திற்கு எதிராகப் போராடுவது என்று போர்வையில் சூறினாம் நாட்டிற்கும் அனுப்புவதற்குத் திட்டம் போடுகிறார்கள்.

ஐரோப்பாவின் இராணுவ வளர்ச்சி நாட்டோ ஐரோப்பாவின் நாட்டோவின் வாயிலாகவும் ஐரோப்பாவிற்கு வெளியில் மேற்கு ஐரோப்பியக் கூட்டமைப்பு (WEA) வாயிலாகவும் துருப்புக்களைத் திடீரென குவிப்பதற்கு உதவியாகிறது.

ஐரோப்பிய நாடுகள் ஆசிய ஆபிரிக்க, மத்திய கிழக்கு நாடுகளுக்குள் புதிய போர்வையில் ஊடுருவுவார்கள்.

மனித உரிமைகளுக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் குரல் எழுப்பும் 'சரிநிகர்', நீங்களும் சந்தாதாரராகுங்கள்.

சரிநிகர்

ஆண்டுச்சந்தா
15 US $

6, அலோசாலை, கொழும்பு-3, இலங்கை

'SARI NIHAR', 6, ALOE AVENUE, COLOMBO - 3, SRI LANKA.

www.tamilarangam.net



# நெதர்லாந்தில் கல்வி

Riet Buurman

நெதர்லாந்தில் எவ்விதத்தில் கல்வி அமைந்துள்ளதென்பதை புரிந்துகொள்வது பலபெற்றோருக்கு சிக்கலாகவுள்ளது. எனது பிள்ளைக்கு எந்த பாடசாலையை தெரிவுசெய்வது, எவ்விதத்தில் அங்கு- கல்வி கற்பிக்கப்படுகின்றது, என்பீடங்களை அப்பாடசாலையில்- எனது பிள்ளை தெரிவுசெய்யலாம், எமக்கு எழும் கேள்விகளை அல்லது பிரச்சினைகளை யாரிடம் நாம் கேட்கலாம் என்று பல- வினாக்கள் தோன்றலாம். இக்கட்டுரையின் நோக்கம் நெதர்லாந்தில் உள்ள கல்விபற்றிய சில விபரங்களை கொடுப்பதுவேயாகும்.

- அடிப்படைக்கல்வி பாடசாலை வயது ± 4 - 12 வருடம்
  ( De basisschool )
- தொடர்கல்வி பாடசாலை வயது ± 12 - 18 வருடம்
  (Voortgezet onderwijs)
- உயர்கல்வி பாடசாலை வயது > 18 வருடம்
  ( Hoger onderwijs )

## 1. அடிப்படைகல்வி பாடசாலை
## ( De basisschool )

ஒரு பிள்ளை 4 வயது- அடையும்போது அடிப்படைக்கல்வி பாடசாலைக்கு செல்லலாம் அப்பிள்ளை 5 வயதை அடைந்ததும் கட்டாயமாக அப்பாடசாலைக்கு செல்லுதல் வேண்டும். இக்கட்டாயப்படுத்தும் முறையை நெதர்லாந்தில் கல்வி கற்கும்- கடமை ( de leerplicht ) என்று கூறுவர். இககட்டாயக்கல்வி முறை நெதர்லாந்தில் உள்ள சகல பிள்ளைகளும் பாடசாலைக்கு செல்வதற்காக அமுல்படுத்தப்படுகின்றது. இதனால் நெதர்லாந்தில் எழுத வாசிக்க தெரியாதவர்கள் மிக குறைவாகவுள்ளனர். இச்சட்டம் சிறுபிள்ளைக-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ளை தொழிலுக்கு அமர்த்துவதனின்றும் பாதுகாக்கின்றது. இக்கட்டாயக்கல்விசட்டம் ஒருபிள்ளை- 5 வயதானதன் பின் அடுத்தமாதத்தில் முதலாவது பாடசாலை நாளிலேயே தொடங்கும். ஒரு- மாணவர் 16 வயது அடைந்தது ம்அவ்வருட முடிவின் பின் இச்சட்டத்துக்குள்ளாக்கப்படமாட்டார் இதன்பின்னர் அம்மாணவர் தொடர்ந்தும் ஒரு வருடத்துக்கு கிழமையில் இரு நாட்கள் கட்டாயமாக பாடசாலை செல்லுதல்- வேண்டும். இதனையும் "ஒருபகுதி கட்டாயகல்வி சட்டம்" எனலாம். பெற்றோர் இக்காலத்தில் தகுந்த காரணமின்றி பிள்ளைகளை பாடசாலைக்கு செல்லாமல் வீட்டில் வைத்திருக்க முடி- யாது.

அடிர்படைகல்வி பாட- சாலையில் 1 வது, 2 வது பிரிவுகள் அதாவது பாலர் பிரிவில் பிள்ளைகள் முக்கியமாக விளை- யாடடு மூலம் spelenderwijs பலதுறைகளில் முன்னேறுவார்கள். இப்பருவத்தில் முக்கியமாக மேற்பிரிவுக்கான அத்திவாரம் இடப்படுகின்றது. சிறு துண்டுகளிலிருந்து- கட்டுதல், படம்வரைதல், சிறுதுண்டுகளாக வெட்டுதல், ஒட்டுதல் போன்றவை பிள்ளைகள் பின்பு எழுதுவதற்கு தேவையான விரலின் அசைவுகளை வளர்ப்பதற்கான சிறந்த செயல்களாகும். கதையைக்கவனித்து கேட்பதும், தான் மற்றும் பிள்ளைகளுடன் வட்டமாக இருந்து ஏதாவது ஒன்றைப்பற்றி கூறுவதும்- மொழிவளர்சிசிக்கு முக்கியம் மட்டுமன்றி பாடத்தையும் செய்யவேண்டிய வகைபற்றிய குறிப்பை விளங்குவதற்கும் முக்கியமானது.

இரண்டாம் பிரிவின் பின்னர் அனேகமான பிள்ளைகள் கிட்டத்தட்ட 6 வயதில் 3 ம் பிரிவுக்கு போவார்கள். அப்பிரிவில் வாசித்தல், எழுத்து, கணிதம் போன்ற பாடங்களை தொடங்குவார்கள். சில பிள்ளைகள் இவ்வயதில் இப்- பாடங்களை தொடங்குவதற்கு மற்றவர்களிலும் இளமையாகவும், விளையாட்டுத்தனமாகவும் இருப்பர் அத்தகைய பிள்ளைகளுக்கு மேலும் ஒரு வருடம் பாலர்பிரிவில் இருப்பது சிறந்தது. 2 வது பிரிவுக்கு- கல்விகற்பிக்கும் ஆசிரியர் பிள்ளைகளின் வளர்ச்சிபற்றி அதிகம் தெரிந்தவராக இருப்பது மட்டுமன்றி அப்பிள்ளை 3 ம் பிரிவுக்கு செல்வது புத்திசாலித்தனமானதா என்பது பற்றிய நல்லஅலோசனை வழங்கக்கூடியவராகவும் இருப்பர்.

அடிப்படைகல்வி பாடசாலையில் வாசிப்பு, கணிதம், எழுத்து, புவியியல், சரித்திரம், உயிரியல், சங்கீதம், சித்திரம், கைவே- லை, உடற்பயிற்சி ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படும். இம்பாட- சாலையின் இறுதி வருடங்களில்- ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

நெதர்லாந்தில் சிலபாடசாலைகள் பிரத்தியேக பாடசாலைகளாக bijzonder onderwijsஅதாவது ஏதாவது- ஒரு மத அடிப்படையிலானவை- யாக பெரும்பாலும் கிறிஸ்தவமத அடிப்படையிலானவையாக அ

www.tamilarangam.net

மைந்துள்ளன. இப்பாடசாலைகளில் சமயமும் ஓர் பாடமாகும். அரசாங்க பாடசாலைகளில்- openbaar onderwijs அனேகமாக சமயம் ஒரு பாடமாக இருக்கமாட்டாது. ஆனால் பெற்றோர் சமயம் கற்பிக்கவேண்டுமென விரும்பினால் அரசாங்க பாடசாலையிலும் சமயம் கற்பிப்பார்கள். கிறிஸ்தவமதமல்லாத ஏனைய- மதங்களுக்கும் கவனம் செலுத்த விரும்பின் பாடசாலையுடன் தொடர்பு கொண்டு ஆலோசிக்கலாம்.

பாடசாலையில் அதிகம் வெளிநாட்டு பிள்ளைகள் கல்வி கற்றால் தங்கள் மொழியும் கலாச்சாரமும் (ஆகக்கூடியது கிழமைக்கு 5 மணித்தியாலம்) கற்பிக்கப்படும். பிள்ளை அல்லது பிள்ளையின் பெற்றோர் பிறந்த நாட்டின் வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களும் இவற்றுள் அமையும்.

அடிப்படைக்கல்வியானது இடையறாதகல்வியையும் கல்வி வளர்ச்சிமுறையையும் - நோக்கமாக கொண்டுள்ளது. சகல பிள்ளைகளும் ஒரேமாதிரியாக இருக்கமாட்டார்கள்- என்று கருதப்படுகின்றது. விரைவில் பயிலக்கூடிய பிள்ளைகளுக்கு உதாரணமாக மேலதிகமாக பயிலும்படி கொடுப்பார்கள். கற்பதில் கஷ்டம் உள்ள- பிள்ளைகளுக்கு மேலதிக உதவியும் கவனமும் செலுத்தப்படும்

பிள்ளைகள் கிரமமாக பாடசாலையில் கிடைக்கப்பெறும் வளர்ப்புநிலைக்குறிப்பை - report வீட்டுக்கு கொண்டு செல்வர்..அக்குறிப்பிலிருந்து - பெற்றோர் பாடசாலையில்- பிள்ளையின் கல்விநிலை எப்படி உள்ளது என்பதை விளங்கிக்கொள்ளலாம். அடிப்படைக்கல்வி பாடசாலை எல்லாப்பிள்- ளைகளது பிரச்சினைகட்கும் உதவி வழங்க இயலாது போகலாம். சில பிள்ளைகட்கு வேறுவகையிலான அணுகுமுறை தேவைப்படும். அத்தகைய பிள்ளைகட்கு வேறுவிசேசமான பாடசாலைகள் உண்டு. அங்கு அவர்கட்கு நல்லமுறையில் கவனம்- செலுத்தமுடியும்.

நெதர்லாந்து கல்வித் திட்டத்தில் விசேசதொடர்கல்விக்கான 15 க்கு மேற்பட்ட வேறுபாடசாலைகள் உண்டு. உதாரணமாக செவிடான பிள்ளைகளுக்கு, அங்கவீனமுள்ள பிள்ளைகளுக்கு, கற்பதில் பிரச்சினையுள்ள பிள்ளைகட்கு, வளர்த்தெடுப்பதில் பிரச்சினையுள்ள- பிள்ளைகட்கு என்ற வகையில், வெவ்வேறு விசேடபாடசாலைகள் உண்டு. பெற்றோர் தம்- பிள்ளைக்கு ஒர் விசேட பாடசாலை தேவையென அறிவித்த தன் பின்னர் "அனுமதிவழங்கும் குழு" அப்பிள்ளைக்கு அந்தப்- பாடசாலை தகுந்ததா என்பதனைப்பரிசீலனை செய்யும்.

பாடசாலை நடைமு-


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றையில் பங்குகொண்டு தமது செல்வாக்கினை பிரயோகிக்க பெற்றோருக்கு இடமுண்டு. அநேகமான அடிப்படைப்பாடசாலைகளில் இடம்பெறுவதைப் போல் வாசிப்பு, கணிதம், கைவேலை, பாடசாலையினால் ஒழுங்குசெய்யப்படும் பிரயாணங்கள், மதிய இடைவேளையில் பிள்ளைகள் தங்குவதற்கான உதவி போன்றவற்றில் பெற்றோர் பங்கு கொண்டு உதவுவதுமட்டுமன்றி முக்கியமான பாடசாலை நடைமுறைகளில் தங்கள் விருப்பத்தை பெற்றோர்ஆசிரியர் சங்கம் ஊடாக தெரிவித்து அவ்விடயங்கள் பற்றிசேர்த்து தீர்மானிக்கலாம். ஒவ்வொரு பாடசாலையிலும், அப்பாடசாலையில் உள்ள ஆசிரியர் தொகைக்குச்சமமான அதேதொகையில் பெற்றோர்களும் அச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பர்.

அடிப்படைக்கல்வி பாடசாலையின் இறுதிக்கட்டத்தில் படிப்படியாக பிள்ளைகள் தொடர்கல்விக்கு ஆயத்தப்படுத்தப்படுவார்கள். இறுதி வகுப்பில் சிலசமயம் பிள்ளைகள் வீட்டுவேலை பெற்றுக்கொள்வதுடன் இப்பாடசாலைக்கல்வி முடிவடைந்தபின்னர் தொடர்ந்து செல்லும் பாடசாலைகள் பற்றி உரையாடுவார்கள். எந்தவிதமான தொடர்கல்வி பாடசாலைக்கு பிள்ளை தகுந்தவர் என அறிவதற்காக அடிப்படைக்கல்வி பாடசாலைகள் இறுதி வருடத்தில் ஒரு பரீட்சை( "சிற்றோ" நடத்துவார்கள். அந்த சிற்றோ பரீட்சையில் அப்பிள்ளை பெற்றபெறுபேறுகளிலிருந்தும் பாடசாலையில் அப்பிள்ளை எவ்வாறு இயங்கினார் என்பதிலிருந்தும் ஆசிரியர்பெற்றோருக்கு எந்தவகையான பாடசாலை அப்பிள்ளைக்கு சிறந்தது என்று ஆலோசனைவழங்குவார். எந்தவிதமான பாடசாலைக்கு பிள்ளை செல்லவேண்டுமென தனித்து ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோரும் தமது பிள்ளைக்கு எது சிறந்தது என்று தெளிவாக ஆசிரியருக்கு தெரிவிக்க வேண்டும். பெற்றோரும் ஆசிரியரும் சேர்ந்து பிள்ளைக்கு எந்தவிதமான பாடசாலை சிறந்ததெனத்தெரிந்தெடுத்தல் வேண்டும்.

பல தொடர்கல்விப்பாடசாலைகள் ஜனவரி-மார்ச் மாதத்தில் சில நாட்களில் தங்கள் பாடசாலையை பெற்றோரும் பிள்ளைகளும் பார்வையிடுவதற்காக திறந்து வைப்பார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளையுடன் அந்த நாட்களில் செல்வது முக்கியமானது. பெற்றோர் பாடசாலையை பார்வையிடுவது மட்டுமன்றி தங்களுக்கு தேவையான இகள்விகளை கேட்டு தெரிந்துகொள்ளலாம். பெற்றோர் ஒர் பாடசாலையினை தேர்ந்தெடுத்தபின்னர் பிள்ளையை பாடசாலையில் பதிவு செய்தல் வேண்டும். இறுதியாக பிள்ளையை மாணவராக ஏ

www.tamilarangam.net

ற்றுக்கொள்வது பற்றி பெற்றோர் தேர்ந்தெடுத்த பாடசாலை முடிவுசெய்யும்.

அடிப்படைக்கல்விப்பாடசாலை-ஆசிரியர்களின் சிபார்சையும், சிற்றோ பரீட்சை பெறுபேறையும் கவனத்துக்யெடுத்து பாடசாலை பிள்ளையின் பிரவேசம்-பற்றி தீர்மானிக்கும்.

## 2. தொடர்கல்வி பாடசாலை

( Voortgezet onderwijs )

நெதர்லாந்தில் சகல-பிள்ளைகளும் அடிப்படைக்கல்விப் பாடசாலைக்கல்வியின் பின்னர்-தொடர் கல்விக்காக வேறு, பாடசாலைக்கு செல்வார்கள். இதன்பொருட்டு உள்ள இரு வழிகளில் ஒன்றினைத்தெரிவு செய்து கொள்ளலாம்.

### அ, கீழ்நிலைஉத்தியோகக்கல்வி

Lager Beroeps Onderwijs

இப்பாடசாலைகல்வி-நடைமுறை அனுபவ அணுகுமுறை வாயிலாக கற்கும் கல்வியாகும். இங்கு மாணவர்கட்கு ஓர் தொழிற்கல்விக்கான தயார் நிலை உருவாக்கப்படும் தொழில்நுட்பம், விவசாயம், புவியியல், நிர்வாகம், மனையியல், குடிசைத்தொழில் ஆகிய பல்வகையான L B O பாடசாலைகள் உள்ளன. ஒவ்வொருபாடசாலையிலும் மேலும் பல உட்பிரிவுகள் உண்டு. அதாவது ஒரு தொழில்நுட்ப பாடசாலையில் உதாரணமாக கட்டடவேலைப்பகுதி, மின்சாரதொழில்நுட்பம், உலோகத்தொழில், கேக் போன்ற இனிப்புவகைகள்-பேக் பண்ணுதல் போன்ற பிரிவுகள் இருக்கும். சகல பயிற்சிகளும் 4 வருடங்கள் நடைபெறும். L B O பரீட்சையின் பின்னர் மாயவர்கள் நடுத்தர-தொழிற்கல்வி M B O

கற்பதற்காக தொடர்ந்து செல்லலாம். இங்கு தொழிலுக்கான சான்றுப்பத்திரம் பெறுவதற்கு-கல்வி கற்பிக்கப்படும். LBO வின் பின்னர் ஒருவர் தொழில்-செய்துகொண்டு அதேவேளையில் கல்வி கற்கவும் விரும்புவாராயின் -அதாவது இதனை மாணவநிலை( Leerlingwezen என்பர். அம்மாணவர் அக்கல்வியினை மேற்கொள்ளும்போது கிழமையில் இரண்டொரு நாட்களுக்கு பாடசாலைக்கு சென்றுகொண்டு மிகுதி நாட்கள் 3 அல்லது 4 நாட்கள் தொழில் செய்யலாம். அம்மாணவர் பாடசாலையில் விளக்கத்தையும், Theorie தொழில் செய்யுமிடத்தில் அதன் நடைமுறையையும் Praktijk பயில்வர்.

### ஆ, பொதுதன்மை பாடசாலை

இப்பாடசாலைக்கல்வி தொழில் நோக்கிலன்றி அதிக விளக்கம் கொண்டதான (Theoretischer ) கல்வித்திட்டத்

www.tamilarangam.net

தை உள்ளடக்கியவையாகும். இதுவே 2 வது வழியாகும். நடுத்தர பொதுத்தன்மையுடைய-தொடர்கல்வி பற்றி நாம் அறிவோம்.

MAVO

இதுவே மிகப்பிரபல்யமானதும் அதிக மாணவர்கள் பயில்வது-மான பாடசாலையாகும். இது ஓர் பரந்த பொதுவான வளர்ச்சியினை மாணவருக்கு வழங்குவதுடன் தொடர்கல்வி கற்பதற்கான அத்திவாரத்தையும்-இடுகின்றது. இக்கல்விக்காலம்-4 வருடங்களாகும், M A V O பரீட்சை முடிவுற்றதும் ஒரு -பகுதி மாணவர்கள் தொடர்ந்து H A V O உயர்தர பொது-தொடர் கல்வி (

கற்பதற்கு செல்வார்கள். இவர்கள் H A V O 4 வது வகுப்பில்-சேரலாம். மற்றைய பகுதி மாணவர்கள் நடுத்தர தொழிற்கல்வியை நோக்கி ( MBO )செல்வார்கள். மேலும் வேறுசிலர் -வேலை செய்துகொண்டு மீதமாகஉள்ள நேரத்தில் வேறுதொழிலுக்காய கற்பார்கள். H A V O கல்விக்காலம் 5 வருடங்களாகும். இது மாணவருக்கு மிகவும் பரந்த பொதுவான வளர்ச்சியி-னை வழங்கும் H A V Oவின் பின்னர் மாணவன் H B O உயர் -தொழிற்கல்விக்கு செல்லலாம். மாணவர்கள் HAVO முடிந்ததும்-விஞ்ஞானக்கல்விக்கு தயார் செய்யும் பாடசாலையிலும் V W O 5 வது வகுப்பில் சேரலாம். சிலர் HAVO முடிந்ததும் வேலை செய்ய விரும்புவர். அவர்கள் தங்களது வேலையுடன் ஓர் தொழிலுக்கான கல்வியையும் பயிலு-வார்கள். விஞ்ஞானக்கல்விக்கு-தயார் செய்யும் கல்வி 6 வருடங்களைக்கொண்டது. அத்துடன்-இங்கு பல்கலைக்கழகம் செல்வதற்கு ஆயத்தம் செய்வார்கள்.

சகல தொடர் கல்விப் பாடசாலைகளும் "பாலம் அ-மைக்கும் வருடத்தை" (brug jaar அல்லது "பாலம் அமைக்கும் வகுப்பை" ( brug klas கொண்டிருக்கும். இவ்வருடத்தில்-அல்லது இவ்வகுப்பில் மாணவருக்-கு அடிப்படைக்கல்விப்பாடசாலையிலிருந்து தொடர் கல்விப்-பாடசாலைக்கு செல்லும்போது சடுதியான மாற்றம் இல்லாதிருப்பதற்காக இந்த "பாலம் அமைக்கும் வகுப்பு" அமையும். இந்தவருடத்தில் மாணவர்கள் சரியான-கல்வித்திசையினை தெரிவுசெய்துவிட்டனரா என்பதை காணலாம். பாலம் அமைக்கும் வகுப்பின் வருட இறுதியில் பாடசாலை சமுகம் ( scholengemeenschap )எத்தகைய பாடசாலை மாணவருக்கு உகந்தது என்பதை பார்க்கும். அதாவது- LBO,MAVO,HAVO அல்லது VWO என்பனவாகும். அரசாங்கத்துக்கு 1993 ம் ஆண்டு ஆரம்ப வளர்ச்சியை உருவாக்குவதற்கான சட்டத்தை ( wet basis vorming) அமுல்படுத்தும் திட்டம் உண்டு. அவ்வாறாயின் பாலம் அமைக்கும் வருடங்கள் மேலும் 2 அல்லது 3 வருடங்கள் அதிகமாகும். இக்காலத்தில் சகலபிள்ளைகளும் ஒரே பாடங்களை கற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்கள். ஆனால் அவர்கள் இப் பாடங்களை வெவ்வேறு தராதரங்களில் பயிலுவார்கள். இவற்றைவிட தனித்து ஒரு வகையான கல்வி கற்பிக்கும் பாடசாலைகளும் உண்டு உதாரணமாக தனித்த M A V O அல்லது LIO பாடசாலைகள். பலவகையான கல்வி கற்பிக்கும் பாடசாலைகளும்உண்டு. உதாரணமாக MAVO வும்L E Oவும், அல்லது MAVO, HAVO, VWO சேர்ந்தவை.

ஓர்வகை கல்வியிலிருந்து- மற்றவகை கல்விக்கு மாறவேண்டுமாயின், பாடசாலை சமுகத்தில் ( scholen_emeenschap )கற்பது அதாவது பலவகைக்கல்விப்பாடசாலையில் கல்வி கற்பது தனித்து ஒருவகைக்கல்வி கற்பிக்கும் பாடசாலையில் கற்பதிலும் சிறந்தது. ஏனெனில் ஒரே பாடசாலையில் மாணவன் சுலபமாக ஒரு வகையிலிருந்து மற்றயதற்கு மாறிக்- கொள்ளலாம்.

3. உயர் கல்வி

உயர் தொழிற்கல்வியும் (HBO.) பல்கலைக்கழகக்கல்வியும் இதன் கீழ் அடங்கும். ஓர்- உயர் தொழிற்கல்வி அதிக தரமுள்ள ஓர் முழுமையான தொழிலுக்கான கல்வியாகும். இக்கல்விக்காலம் அனேகமாக 4 வருடங்களாகும். பல்கலைக்கழகக் கல்வி ஏறக்குறைய 6 வருடங்களாகும்.

வயதுவந்தோர் கல்வி

இளையோர் சாதாரண பகல் பாடசாலைகளில் கல்வி- கற்று சான்றுபத்திரம் பெறுவது போன்று வயதுவந்தவர்கட்கும், பரந்த அளவில் அமைந்துள்ள - இராப்பகல் பாடசாலைகள்- உள்ளன. இதுபற்றிய விபரம் - பெறுவதற்கு ஒருவர் உள்ளூராட்சி அமைப்பு ( Gemeente ) பொதுநூலகம், அல்லது பாடசாலை இவற்றில் ஒன்றை நாடலாம்.

முடிவுரை

நெதர்லாந்தில் உள்ள பலவகையான பாடசாலைக- ளை பற்றிய போதுமான விபரங்களை ஒருசில பக்கங்களில் கூறுவது மிகக்கடினம். இக்கட்டுரை அதற்கான ஒரு முயற்சி- எனலாம். ஆனால் ஒவ்வொரு- பாடசாலையினாலும் இதற்கென குறிக்கப்பட்டுள்ள "கேள்வி நேரம்"( spreekuur ) சென்று அல்லது "பெற்றோர் இரவு"( ouderavond ) கூட்டத்துக்கு சென்று அறிந்து- கொள்ளலாம். இங்கு முக்கியமாக பாடங்களைப்பற்றியும்- அப்பாடங்களில் உங்கள் பிள்- ளையின் முன்னேற்றம் பற்றியும் வேறு விடயங்கள் பற்றியும் உரையாடுவார்கள். பல ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தின் பின்னர் இதுபற்றி கதைப்பதற்கு தயாராக உள்ளனர். பெற்றோர் கேள்வி இருக்குமாயின் தயங்காமல் பாடசாலையுடன் தொடர்பு கொள்ளலாம். பாடச்செலவு பணம் பற்றியும் கல்விச்செலவுக்கான பணஉதவி பற்றியும் அறிய விரும்பின் உங்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அஆஇ

AANAA AAWANNAA IENAA

அரசியல் ஆய்வு இலக்கிய ஏடு

ஐப்பசி 1991 சுவடு 7

முகவரி : AANAA AAWANNAA IENAA
Postbus 85326
3508 A H Utrecht

சந்தா : 1 வருடம் (தபாற்செலவு உட்பட)

| | | |
|---|---|---|
| நெதர்லாந்து | - | ƒ 15,- |
| ஐரோப்பா | - | ƒ 20,- |
| அமெரிக்கா | - | 15 $ |
| ஆசியா | - | 15 $ |
| அவுஸ்திரேலியா | - | 15 $ |

வங்கி கணக்கு : 12 75 43 171
Rabobank, Odyk, Nederland


கள் பிள்ளையின் பாடசாலை- அல்லது உள்ளூராட்சி அமைப்பின் தகவல் பிரிவிலும் விபரங்கள் பெறலாம். மேலும் இவை- பற்றி அறிய விரும்பின் "சூற்ற மேயர்" என்னுமிடத்தில் உள்ள ( Zoetermeer ) கல்வி- விஞ்ஞான அமைச்சினால் பிரசுரிக்கப்படும் சில வெளியீடுகளிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்